
**Laodicean Times**

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு10 தொகுதி 4 அக்டோபர் - டிசம்பர் 2020

**R 5437**

## “இராஜ்யத்தின் ஆசீர்வாதம் ஒலிவமலை”

## “THE MOUNT OF OLIVES THE KINGDOM OF BLESSING’

**“திறவுகோல் வசனம் : சகரியா 14:4**
**“அந்நாளில் அவருடைய பாதங்கள் எருசலேமுக்குக் கிழக்கே உள்ள ஒலிவமலையின்மேல் நிற்கும்;அப்போது ஒலிவமலை கிழக்கு மேற்காய்ச்செல்லும் மிகப்பெரும் பள்ளத்தாக்கு ஒன்றில் இரண்டாகப் பிரிக்கப்படும். ஆகவே, அம்மலையின் ஒரு பகுதி வடக்கு நோக்கியும், மற்றொரு பகுதி தெற்கு நோக்கியும் விலகி நிற்கும்”**

உபத்திரவ நாளின் முடிவினையும், அந்த உபத்திரவத்தோடு தொடர்புடைய தேவனுடைய வல்லமை வெளிப்படுவதையும் இந்த ஆதார வசனம் குறிப்பிடுகிறது. ஒலிவமலை நேரடி அர்த்தத்தில் இப்பொழுதும், அநேகமாக பின்னரும் இவ்விஷயத்தில் ஏதாவதொருவிதத்தில் சம்பந்தப்பட்டுள்ளது. இது ஒரு மாபெரும் பூமிஅதிர்ச்சியை சந்திக்கப்போவதாக இங்கு குறிப்பிடப்படுகிறது. அந்நேரத்தில், எருசலேமில், இஸ்ரயேலர்கள் கூட்டி சேர்க்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை, அங்கே அவர்களுக்கு கர்த்தருடைய தயவு வெளிப்படுத்தப்படும் என்பதிலும் சந்தேகமில்லை. “யாக்கோபின் இக்கட்டுக்காலத்தின்” முடிவில் இது நடைபெறும். அங்கே கர்த்தர் பிரசன்னமாகியிருந்து, அவர்களை அதிலிருந்து மீட்பார். சபை மகிமைக்குள் கடந்துசென்றபிறகே இது நடைபெறும் என்பது நம் கருத்தாக உள்ளது. இங்கு விளக்கப்பட்டுள்ளதன் நிறைவேறுதலானது மகிமையடைந்த சபையின் பணிகளுள் ஒரு பகுதியாக இருக்கும் என தோற்றமளிக்கிறது.

அப்பொழுது முற்பிதாக்கள் காணப்படுவர், தேவதயவு யூதர்களுக்கு திரும்பியிருக்கும் என்று நாம் புரிந்துகொள்கிறோம். இஸ்ரயேலரின் பூமிக்குரிய ஆசீர்வாதங்களும் அங்கே துவங்கும். யூதர்கள் அப்போது, புதிய உடன்படிக்கைக்குரிய ஏற்பாட்டின் கீழிருப்பதை இது குறிப்பாக சுட்டிக்காட்டுவதால், சபை முழுமையடைந்திருக்கும் என்பது உறுதியாகிறது.

உருவகமாக, ஒரு மலை என்பது இராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. யேகோவா தேவன் தம் பாத ஸ்தானத்தை மகிமைப்படுத்துவார் என்று வேதவசனங்கள் மற்ற இடங்களில் அறிவிக்கின்றன. கீழ்த்திசை நாட்டு ஜனங்களின் சிந்தையில், ஒலிவம் என்பது வெளிச்சம் மற்றும் ஆகாரத்தோடு தொடர்புடைய கருத்தாக எப்பொழுதும் இருந்துவருகிறது. வெண்ணெய்க்கு பதிலாக ஒலிவ எண்ணெயை அவர்கள் வழக்கமாக உபயோகிக்கிறார்கள். ஒலிவம், வெளிச்சம் மற்றும் ஆகாரத்தைத் தருவதால், ஒலிவமலை தேவராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. ஒலிவ எண்ணெய் யூத ராஜாக்கள் மற்றும் ஆசாரியர்களது தலையின்மீது ஊற்றப்படுவது, பரிசுத்தஆவியை அடையாளப்படுத்துகிறது. மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்காகவே தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. இந்த இராஜ்யம், பரத்துக்குரியதும், பூமிக்குரியதுமாக இரண்டு பாகங்களக இருக்கும். அதனுடைய ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமையின்கீழ், முடிவில் எல்லா ஜனங்களும் வந்து சேர்வார்கள்.

---------

## இம்மாத வெளியீட்டில்


.. ராஜ்யத்தின் ஆசீர்வாதம் ஒலிவ மலை ..... 1
.. அவர் செட்டைகளின் கீழ் .... 2
.. அவருடைய கருணைஅன்பு எவ்வளவு பெரியது ... 4
.. ஐஸ்வரியவானும், தரித்திரனும் ... 8
.. நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் ... 12



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

**R 5437**

# "அவர் செட்டைகளின் கீழ்"

# "UNDER HIS WINGS'

**"திறவுகோல் வசனம் : சங்கீதம் 91:4 "அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின்கீழே அடைக்கலம் புகுவாய்"**

சங்கீதம் 91, சபைக்கு மிகத் தெளிவாகப் பொருந்துகிறது. இதிலும்குறிப்பாக, இந்த யுகமுடிவில் ஜீவிக்கும் சபை ஜனங்களுக்கு விசேஷமாகப் பொருத்திக்காட்டக் கூடியதாக தோற்றமளிக்கிறது. ஆனால் தனிப்பட்ட வழியில் ஒரு நபருக்கு இது முகவரியிடப்பட்டபோதிலும், சரீரத்தின் தலை முதல் கடைசி அங்கம் வரையிலான முழு கிறிஸ்துவை குறிப்பிடுகிறது. நம் கர்த்தராகிய இயேசு சோதனைகளையும் கஷ்டங்களையும் உடையவராயிருந்ததால்,அவருக்கு பாதுகாப்பும் ஆதரவும் தேவைப்பட்டது. அவர் பரலோகப்பிதாவிடத்திற்குச் சென்று, தேவையான உதவியைக் கோரினார். அவ்வாறே கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் தொடர்ச்சியாக அவருடைய உதவியை நாடவேண்டியுள்ளது.

ஆனால் சங்கீதக்காரன், இன்றைய நம் நாளுக்கு விசேஷித்தவிதமாக குறிப்பிடுவதாக காணப்படுகிறது. "உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது"(சங்91:7). நிச்சயமாகவே, கடந்த காலங்களில் துன்பங்களால் ஆயிரம் பேர் விழுந்திருக்கிறார்கள்,ஆனால் அங்கு சொல்லப்பட்ட "விழுகை", தேவ பிள்ளைகளிலிருந்து விழுந்துபோவதைக் குறிப்பிடுகிறது. அநேகர் பின்னிட்டுத் திரும்புவர், காட்சியாக காண்பிக்கப்பட்ட மாபெரும் யுத்தத்தில், கொல்லப்படாவிட்டாலும் காயப்படுவர், தீங்குக்கு ஆளாவர்.

இந்த யுத்தமானது, இந்த சுவிசேஷயுகத்தின் முடிவுப் பகுதியில் நடக்கும் என்று நாம் புரிந்திருக்கிறோம். தேவனோடு அர்ப்பண உடன்படிக்கை செய்த பிள்ளைகளுக்கு எதிராகவும், அவர்களோடு தொடர்புடையவர்களுக்கு எதிராகவும் தற்போது விசேஷித்தவிதமாக இருளின் அதிகாரங்கள் படையெடுத்து வருகின்றன. மிகப்பெருமளவில் வாய்ப்புக்களையும் அல்லது மிகப்பெரும் வெற்றிகளையும், கிறிஸ்தவ மண்டலம் கடந்த நூற்றாண்டில் அடைந்ததுபோல், தேவனுடைய பிள்ளைகள் ஒட்டுமொத்தமாக முந்தைய நாட்களில் ஒருபோதும் அடைந்ததில்லை. கடந்த ஐம்பது, அறுபது அல்லது எழுபது ஆண்டுகளாக வளர்ச்சியடைந்துவரும் சாத்தானின் தாக்குதல்களுக்குட்பட்டு, அநேகர் அவிசுவாசத்திற்குள்ளும், உயர் பகுத்தறிவு வாதத்துக்கும், தேவ அவநம்பிக்கையிலும் விழுந்துபோயிருக்கின்றனர். மேலும் விழுகைக்கான பல்வேறு இயல்புகள், மிகப்பெரிய கொள்ளைநோய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கொள்ளைநோயை விளைவிக்கிற அவநம்பிக்கை, உலகில் எங்கும் வியாபித்திருப்பதை நாம் காண்கிறோம். அதன் தொண்டர்களுக்கு அப்படிப்பட்ட உள்நோக்கமில்லாதிருந்தும், விரோதியினால் தவறாக வழிநடத்தப்படுகின்றனர்.

வருங்காலத்தில் அவர்கள் சத்தியத்தைக் காணும்போது, அவர்களில் அநேகர், தங்கள் தப்பிதங்களை ஏற்றுக்கொள்வார்கள், ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கிறிஸ்தவ மண்டலத்தில் ஒரு மாபெரும் வறட்சி நிலவும். ஆலயங்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவருகிறது. ஊழியக்காரர்களில் அநேகர், தங்களுக்குள் இருக்கிற ஐயப்பாடுகளையே போதிக்கிறார்கள். அவர்கள் கிருபையிலிருந்து விழுந்திருக்கிறார்கள், தெய்வீக தயவிலிருந்து விழுந்திருக்கிறார்கள், தேவ வார்த்தையை மதித்துப் போற்றுவதிலிருந்து விழுந்திருக்கிறார்கள்.

**கிறிஸ்துவின் பாதங்கள்**

நம் நாளில் ஜீவித்து வருகிற இந்த கிறிஸ்துவின் பாத வகுப்பினரைக் குறித்து இந்த வேத வசனம் சுட்டிக் காட்டுகிறது; "உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு.. உன் வழிகளிளெல்லாம் உன்னைக் காக்கும்படிக்கு, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்"(சங்91:12,11). எல்லா சரீர அவயவங்களும், தலையோடும், ஒருவர் மற்றவரோடும் உறவிலுள்ளனர். இந்த "தூதர்கள்", தெய்வீக வாக்குத்தத்தங்களையும், பரிசுத்தவான்களின் உதவிசெய்கிற துணைமையையும் குறிப்பதாக நாம் புரிந்துகொள்கிறோம். இந்த "தூதர்கள்", இந்நேரத்தில், பாதம் இடறுதலின் கல்லில் இடறாதபடிக்கு பாதத்தைத் தாங்குவதாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளனர்(ஏசா8:14). இந்தக் கல்லில் இடறுவதற்கு மாறாக, தூதர்கள், பெரிதாக மதிப்பிடப்படுகின்ற, உயர்வான நிலைமைகளுக்கு அவர்களை உயர்த்துகின்றனர். பாதம் ஒருபோதும் அசைவுறாது.

நம் திறவுகோல் வசனத்தின் கருத்துருவத்தின்படி, மூடப்படுகின்றவர்கள், இந்த ஒரே வகுப்பார் அனைவரையும்

குறிக்கின்றனர். கோழி தன் குஞ்சுகளை தன் செட்டைகளின் கீழ் ஒன்றுசேர்ப்பதைப்போல, தம் ஜனங்களுக்கு தேவன் ஒரு தாய்க்கோழி போல, தம் செட்டைகளின்கீழ் தம்மோடு நெருக்கமாக ஒன்று சேர்ப்பதில் மகிழ்ச்சியாயிருந்து, தேவையான பாதுகாப்பை அவர்களுக்கு அளிக்கிறார். அவர்கள் அவருடையவர்களாயிருக்கிறபடியால், அவர்களுடைய நன்மைக்காகவே அனைத்தும் நடக்கிறது என்று அவர்கள் முழுமையாக நம்பிக்கை வைத்து, ''சர்வ வல்லவருடைய நிழலின் கீழ்'' தங்கியிருப்பர்.

சர்வ வல்லவர் இங்கு, தாய்ப்பறவையாக தம்மை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். தாய்ப்பறவை தன் குஞ்சுகளின்மீது காண்பிக்கும் பொறுமை, தனிச்சிறப்புடையது. தன் இளம் குஞ்சுகளுக்காக தன் சொந்த ஜீவனைஅது தியாகம்செய்யும். அவ்வாறே கர்த்தர், தம் சொந்தமானவர்களை பாதுகாப்பதற்காக அவர் எதையும்செய்ய தயாராக இருப்பதை இது குறிப்பிடுகிறது. இயேசு தம் பாதுகாக்கும் மேற்பார்வைக்குள் யூதர்களை ஏற்றுக்கொண்டிருப்பார், ஆனால் ஒரு தேசமாக, அவர்களுக்கான தேவையை அந்த ஜனங்கள் புரிந்துகொள்ளவில்லை. இதன் காரணமாக, மாபெரும் உபத்திரவக் காலத்தின்போது, தூக்கியெறியப்பட்டனர். ''கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன், உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று'' என்று இயேசு கண்ணீரோடு அவர்களிடம் கூறினார்.

**நம் பிதாவின் செட்டைகளும், சிறகுகளும்**

நம் திறவுகோல் வசனத்தின் தனித்தன்மையை ஆய்வு செய்வதற்காக நாம் ஆராயும்போது, சிறகுகள் என்ற வார்த்தை, செட்டைகளைக் காட்டிலும் இன்னும் ஒரு படி மேலே சென்று பொருள் தருவதை காண்கிறோம். ''அவர் தம் சிறகுகளாலே உன்னை மூடுவார், அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்''. தாய்க்கோழியின் செட்டைகளின் கீழ் உள்ள, மிருதுவான, பட்டுப்போன்று மென் மயிர்போர்த்திய சிறகுகள், சிறு குஞ்சுகளை வெதுவெதுப்பூட்டி, காத்துக்கொள்ள உதவுகிறது. எதிரிகள் அவைகளைத் தாக்காதபடிக்கு மறைக்கவும், கேடகமாகவும் பயன்படுகிறது. பாதுகாக்கின்ற பலமான செட்டைகள் மட்டுமல்ல, தாய்க்கோழியின் மார்புப் பகுதியிலுள்ள சிறகுகளும், தன் குஞ்சுகளை காப்பாற்ற பயன்படுகிறது. அபாயம் நெருங்கும்போது, தாய்க்கோழி எச்சரிக்கை மணி அடிப்பதுபோல் எழுச்சியடைந்து, தன் சிறுகுஞ்சுகளைப் பார்த்து கொக்கரிப்பதை நாம் கண்டிருக்கிறோம். பின்பு, அவைகள் தங்கள் தாயினிடத்தில் ஓடிவந்து, அவளது செட்டைகளின்கீழ் தழுவியிருப்பதையும், பாதுகாப்பான இடத்திற்கு வந்துசேர்ந்ததால் பயத்திலிருந்து விடுபட்டு, பூரண திருப்தியடைந்திருப்பதையும் காணமுடியும். தற்போது, அந்த சிறு தலைகள் அல்லது கண்கள், மறைந்திருந்து எட்டிப் பார்ப்பதை நம்மால் காணமுடிந்தாலும், குஞ்சுகள் குறைவின்றி பத்திரமாயிருப்பதை உணர்ந்திருக்கும்.

அவ்வாறே நம்மிடையேயும் இருக்கிறது. நம் பரலோகப் பிதாவின் அன்பும், அக்கறையும், ஆதரவும் அவருடைய செட்டைகளாகவும், அவருடைய சிறகுகளாகவும் இருந்து, எல்லாத் தீங்கிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கிறது. வெதுவெதுப்பாயும் நிம்மதியாயும் இருக்கச்செய்கிறது. ஜீவியத்தின் ஒவ்வொரு அனுபவத்தையும் நம் நன்மைக்கேதுவாகவே செய்துமுடிக்க அவரால் கூடும். இருந்தபோதிலும், பழைய சிருஷ்டிக்கல்ல, புதுசிருஷ்டிக்கான வாக்குத்தத்தப்படி தேவன் அனைத்தையும் நம் நன்மைக்காகவே ஒருங்கிணைக்கிறார் என்பதே நாம் நினைவில் கொள்ளவேண்டிய வாக்குத்தத்தமாகும். புது சிருஷ்டிக்கும் பழைய சிருஷ்டிக்குமான நலன்கள், மீண்டும் மீண்டும் மாறும் தன்மையுடையவை. தேவன் நம்மைக்குறித்த அனைத்துக் காரியங்களிலும் ஆர்வமுடையவராயிருந்து, நம் இம்மைக்குரிய காரியங்களை, நம் சிறந்த ஆவிக்குரிய நலன்களுக்காக மேற்பார்வையிட்டு இயக்குகிறார். நாம் அதிக வளத்துடன் இருந்தோமானால், அது புதுசிருஷ்டிகளாக நமக்கு அனுகூலமளிக்காது.

நம் இம்மைக்குரிய நடவடிக்கைகள் நம்மைவிட்டு அகன்றுபோக ஒருவேளை அனுமதிக்கப்படலாம். புதுசிருஷ்டிகளாக நம் சொந்த, சிறந்த நன்மைகள் என்ன என்று அறிய நமக்கு ஞானம் போதாது. மேலும் உலகம் மாம்சம் மற்றும் பிசாசுக்கு எதிரான நம் போராட்டத்தில், எது அதிகமாக நமக்கு உதவும் என்று அறியும் ஞானமும் நமக்குப் போதாது. ஆகவே என்ன அனுபவங்கள் வந்தாலும் ஏற்றுக்கொண்டு, அவைகள் நமக்கு சிறந்தவையாயிருக்குமாதலால், நாம் கர்த்தரிடத்திற்கு ஓடிப்போகக் கடவோம். அந்த அனுபவங்கள் வழியாக வடிவமைக்கப்பட்டுள்ள, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் பாடங்களை அடையத் தேடுவோமாக!

----------

**R 5440**

# "அவருடைய கருணை அன்பு எவ்வளவு பெரியது !"

# "HIS LOVING- KINDNESS, O HOW GREAT !'

**"ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்"–சங்கீதம் 63:3.**

தேவன் இரக்கமுள்ள சுபாவத்தை, குணஇயல்பை, பேரன்பை உடையவராயிருக்கிறார். அது பொதுவானதாயிருந்து, ஒருவிதத்தில் அவருடைய சிருஷ்டிகள் எல்லாரிடத்திற்கும் – அதாவது, புத்திக்கூர்மையுள்ளவைகளுக்கு மாத்திரமல்ல, அவருடைய கரத்தின் புத்திக்கூர்மையற்ற சிருஷ்டிகளிடத்திற்கும் செல்கிறதாயுள்ளது. நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் தம் தயவுகளையும், கருணையையும் பொழிகிறார். அவர் நல்லோர்மீதும் பொல்லார் மீதும் அவருடைய சூரியப்பிரகாசத்தையும், மழையையும் அனுப்புகிறார். ஆனால் ஒரு விசேஷித்த அன்பிரக்கத்தை, ஒரு விசேஷித்த அன்பை, இருதயத்தில் அன்புக்குரிய பண்புகளை உடையவர்களுக்காக அவர் பாதுகாத்து வைத்திருக்கிறார். இவ்வாறு அவர்கள் அப்படிப்பட்ட குணலட்சணத்தின் பண்புக்கூறுகளை பெற்றிருந்ததே, அவர் அவர்களை நேசிக்க அனுமதித்தது. அதாவது, நல்ல உயர்ந்த உள்ளமுடைய ஒவ்வொருவரையும், ஒவ்வொரு நல்ல மனிதர்களும் நேசிப்பதைப்போல, அவர்களை அவர் நேசிக்க அனுமதித்தது.

தேவன் பரிசுத்த தூதர்களையும் அவ்விதமாகவே நேசித்தார். பாவம் செய்வதற்கு முன்பு ஆதாமிடத்திலும், அப்படிப்பட்ட அன்பை அவர் கொண்டிருந்தார். பாவம் செய்ததிலிருந்து ஆதாமின் சந்ததியினிடத்தில் அன்பிரக்க உணர்வை உடையவராயிருந்து, தங்கள் பாவத்தை உணர்ந்து, அவரிடத்திற்கு திரும்புவதற்கான விருப்பமும், அவருடைய சித்தத்தை செய்வதற்கான விருப்பமும் உடையவரிடத்தில், அவ்வன்பை காண்பிக்கிறார். அவருடைய அன்பிரக்கம் அவர்களுக்காக ஒரு அற்புதமான ஏற்பாட்டை உருவாக்க அவரை வழிநடத்தியது. பூமிக்குரிய சுபாவத்தை உடையவர்களாயிருக்க சிலருக்கு அவர் ஏற்பாடு செய்திருந்து, அவர்கள் ஏதேனின் பரிபூரணத்துக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், இங்கு பூமியில் நித்திய ஜீவனுக்கான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வார்கள். மற்றவர்களுக்கு ஆவிக்குரிய சுபாவத்தில் இருப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார், உண்மையாகவே, "கடலின் விசாலத்தைப்போல் தேவனுடைய இரக்கத்திலும் விசாலம் இருக்கிறது!"

ஆனால் மனப்பூர்வமான பாவியை அவர் நேசிப்பதில்லை. இது நீதியுடன் இணக்கமாக இருக்கிறது. நாம் அறியாமையில் இருப்பவர்களை, அறிவுக்குறைவினால் முறையான தகவல்களைப் பெறத்தவறி, தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறவர்களை நேசிக்கலாம். ஆனால் இருதய உள்நோக்கத்திலும், சித்தத்திலும் தவறு செய்கிற துன்மார்க்கரை நாம் நியாயமாக அன்பு செய்ய முடியாது. திருத்தமுடியாத துன்மார்க்கர்களை தேவன் நேசிப்பதில்லை. துன்மார்க்கர் எல்லாரும் அழிக்கப்படுவார்கள். யார் அவருடைய நீதியோடு இசைவிற்கு வருகிறார்களோ, அவர்களே நித்திய ஜீவனுக்கான ஆசீரவாதத்தை அனுபவிக்கமுடியும் என்று அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். இவர்கள் நித்திய மகிழ்ச்சியை பெற்றிருப்பார்கள். அவருடைய அன்புள்ளதயவை நித்தியத்திற்கும் பெறுபவர்களாயிருப்பார்கள்.

சங்கீதக்காரன் தேவனுடைய அன்பிரக்கத்தை தன் சொந்த அனுபவங்களில் ருசிபார்த்திருந்தார். அவர் இஸ்ரயேலின்மேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டபோது, தேவனுடைய பார்வையில் தான் தயவு பெற்றிருந்ததை அறிந்தார். பின்னாளில் அவர் தவறு செய்தபோது, தேவன் அவரை சிட்சித்து, அன்பினால் அவரை தண்டித்தார். ஏனெனில் தாவீது தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவராக – நீதி செய்ய விருப்பமுள்ளவராக– தேவசித்தம் செய்ய விருப்பமுள்ளவராக இருந்தார். ஒரு திசைகாட்டியின் முள்ளானது, குறிப்பிட்ட சூழ்நிலைகளின்கீழ், துருவங்களை நோக்கிய நிலையிலிருந்து, தன் இயல்பான திசைக்கு திரும்புவதைப்போல, சில சமயங்களில் சில ஈர்ப்புகள் தாவீதை ஆதிக்கம்செலுத்தி, தவறான வழிமுறைக்கு அவரை வழிநடத்தியது. ஆனால் சுற்றி வளைத்திருந்த பாவம் விரைவில் கடந்துபோய் அல்லது தன்னுடைய பாவத்தைப் பார்க்க கர்த்தரால் அவர் வழிநடத்தப்பட்டு, திசைகாட்டியின் முள் திரும்பி, மறுபடியும் துருவத்தை சுட்டிக் காட்டுவதுபோல், அவருடைய இருதயமும் முழுமையாக யேகோவா தேவனை நோக்கித் திரும்பியது. எனவே தேவனுடைய அன்பிரக்கம் இல்லாத வாழ்க்கை தனக்கு எந்த மதிப்பையும் தராது என்று தாவீது இராஜா அறிவித்தார். அவருடைய ஜீவியம் கர்த்தருடைய தயவிலிருந்து துண்டிக்கப்படுகின்ற நிலையை அடையுமானால் அவர் விரும்பவில்லை. இப்படிப்பட்ட நிலையில், அவருடைய உதடுகள் எப்போதும் கர்த்தரை அறிக்கையிடும், அவருடைய

அன்பிரக்கத்தை எடுத்துரைக்கும், அவருக்கு துதியை ஏறெடுத்துக்கொண்டும் இருக்கும்.

**நம்முடைய அபிஷேகம் மிகவும் உன்னதமானது**

தற்போது எஜமானைப் பின்பற்றுவதற்காகவும், அவருக்கு ஊழியம் செய்வதற்காகவும் பெருமுயற்சி செய்கிற, கர்த்தருடைய உண்மையான அர்ப்பணிக்கப்பட்ட பிள்ளைகளாயிருக்கிற நமக்கு, இது இன்னும் அதிக உண்மையாயிருக்கிறது. பாவத்திற்கான நிவர்த்தி செய்யப்பட்டு, தேவனுடைய கிருபையினால் அவருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கிற நாம், அவருடைய புத்திரர்களாக ஆகியிருக்கிறோம், பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நாம் கிறிஸ்துவின் அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்திற்குள் வந்திருக்கிறோம். தாவீதைப்போல நாம் உலகத்துக்குரிய சிங்காசனத்திற்காக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கவில்லை. ஆனால் நம்முடைய அபிஷேகம் இன்னும் மேலானது. அது முழு உலகத்தையும் ஆளுகை செய்வதில் பங்கெடுப்பதற்கு பரலோக சிங்காசனத்திற்கு நம்மை அபிஷேகம் செய்கிறது.

எந்த இராஜாவோ அல்லது பேரரசரோ, பூமிக்குரிய சிங்காசனத்தின்மீது சில குறுகிய வருஷங்களுக்குமேல் ஆளுகை செய்வதற்கான நம்பிக்கை கொள்ளமுடியாது. ஆனால் மேசியாவுடன் ஆளுகை செய்ய, அவருடைய சிங்காசனத்தில் பங்குபெற தகுதியாக எண்ணப்பட்டவர்கள் ஆயிர வருடமளவிற்கு ஆளுகை செய்வார்கள். மேலும் இது அவர்களுடைய மகிமையின் துவக்கமாக மாத்திரமே இருக்கிறது. இந்த மகிமைநிறைந்த உயர்த்தப்படுதலுக்காக, அவருடைய ஒரே பேறானகுமாரன் மூலமாக இப்போது நமக்கு பயிற்சி கொடுத்து, தயார்ப்படுத்துகிற பரலோகத்தில் இருக்கிற நம் பிதா, தம் குமாரனுடன் இணைந்து ஆளுகை செய்வதற்காக நம்மோடிருந்து நம் பாதையில் வழிநடத்துவார் என்று நமக்கு உறுதியளிக்கிறார். நாம் அவரை நேசித்து, அவருடைய நோக்கத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறபடியால், நமக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கும்.

எனவே நாம், உலக வரலாற்றிலுள்ள மற்றெல்லா ஜனங்களுக்கும் மேலாக, நமக்காக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய அன்பிரக்கத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் அவருடைய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களையும், அவருடைய விசேஷமான அன்பையும் பெற்றிருக்கிறோம். இந்த அன்பையும், இந்த மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களையும், அவருடைய கிருபையின் அபரிதமான ஏற்பாடுகளையும் எந்த அளவிற்கு நாம் மதித்துப் போற்றுகிறோமோ, அந்த அளவிற்கு நம் இருதயங்கள் நன்றியுணர்வுடன் மறுமொழி கூறும். அந்த அளவுக்கு அவருடைய அன்பிரக்கம் நமக்கு உண்மையாயிருக்கும். மேலும் அவருடைய ஊழியத்தில் நாம் நம் ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்கு தயாராயிருப்போம்.

இயேசுவுடனும் இவ்வாறே இது இருந்தது. அவர் பிதாவின் தயவையே மற்ற எல்லாவற்றிற்கும்மேலாக விரும்பி தேர்ந்தெடுத்தார். அவர் பிதாவின் ஏற்பாடுகளின்மூலம், நமக்காக இந்த புதியதும் ஜீவனுள்ளதுமான வழியைத் திறந்திருக்கிறார். இப்படி நாம் அவருடைய சீஷர்களாக ஆவதினால், "ஆட்டுக்குட்டியானவர் எங்கே பேனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு.." மாத்திரம் வழங்கப்பட்டுள்ள தேவனுடைய விசேஷித்த அன்பிரக்கத்திலும், ஒப்பற்ற வாக்குத்தத்தங்களிலும் அவரோடுகூட பங்குபெறலாம். நிச்சயமாக நம்முடைய உதடுகள் நம் தேவனைத் துதிக்கும். அது மாத்திரமல்ல, நம் குறிப்புப் புத்தகமும், நம்முடைய வங்கிக் கணக்குகளும், நம் செல்வாக்கும் அவரைத் துதிக்கும்! நாம் பெற்றுள்ளஅனைத்தும் கர்த்தரைத் துதிக்கும், மேலும்இவை எல்லாவற்றையும் பெற்றிருக்கவேண்டும் என்று எப்பொழுதும் நம்புகிறோம்.

**"இந்த கதையை சொல்ல பிரியமாயிருக்கிறேன்"**

இந்த தற்கால ஜீவியம் நமக்குக் கொடுக்கக்கூடிய எல்லாவற்றைக் காட்டிலும், நமக்காக தேவனுடைய சொல்லிமுடியாத தயவை உணர்ந்துகொள்ள வந்திருக்கிற நாம், எந்த ஒரு நன்மையான உலகப் பொருட்களையும், ஒவ்வொரு நம்பிக்கை மற்றும் குறிக்கோளையும், ஜீவிக்கிற நம்முடைய ஒவ்வொரு ஆற்றலையும், சந்தோஷத்துடன் அவருடைய பலிபீடத்தின்மீது வைக்கிற நாம், மற்றவர்களுக்கான இரட்சிப்பின் காரியங்களை சொல்வதற்கு மகிழ்ச்சியடைகிறோம். இருளிலிருந்த நம்மை ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவரின் துதியை உரக்கச்சொல்வதில் மகிழ்ச்சியடைகிறோம். அந்தச் செய்தி கடைப்பிடிப்பதற்கு மிகவும் நல்லது!. அதை நாம் பறைசாற்றாவிட்டால் அது நம்முடைய எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல இருக்கும். எனவே நாம் அதை கண்டிப்பாக எடுத்துச்சொல்லவேண்டும். அதைச் சொல்வது நமக்கு உபத்திரவத்தை ஏற்படுத்தும், பணம் செலவழிக்க நேரிடும், முன்னாள் நண்பர்களின் தவறான புரிந்துகொள்ளுதலையும் துன்புறுத்தலையும் கொண்டுவரும். குடும்ப உறவில் ஒருவேளை விரிசல் ஏற்படக்கூடும். இது உலகம் மற்றும் சபைஅமைப்பின் முகச்சுளிப்பையும் ஏற்படுத்தும் என்று விரும்புகிறோம்.

**நம் ஆதார வசனம் பரிசுத்தவான்களுக்கு மட்டுமே பொருந்துகிறது**

நம் ஆதார வசனத்தில் தாவீது தீர்க்கதரிசி, கிறிஸ்துவின் சபையைப்பற்றி தீர்க்கதரிசனமாகப் பேசியுள்ளார். இந்த வார்த்தைகளை தேவனுடைய பரிசுத்தவான்களுக்குத் தவிர வேறு யாருக்கும் பொருத்தமுடியாது. தேவனுடன் நடந்து, அவருடன் பேசுகிறவர்கள் தவிர, வேறு யாரும் தங்கள் பூமிக்குரிய ஜீவியத்தைக் காட்டிலும், தேவனுடைய தயவை அதிக விலைமதிப்புள்ளதாயும், விரும்பக்கூடியதாயும் மதிப்பிட மாட்டார்கள். இந்த விஷயத்தை சீர்தூக்கிப் பார்க்கும்படி சராசரி பெயர் கிறிஸ்தவனிடம் கேட்கும்போது, கர்த்தருடைய தயவிற்காக இந்த வாழ்க்கையை பரிமாறிக்கொள்வாரா என்று கேட்போமானால், அதாவது, தராசின் ஒருபுறத்தில் எல்லாவித நற்காரியங்கள், நம்பிக்கைகள், குறிக்கோள்கள், குடும்பப் பிணைப்புகள், சமூக அந்தஸ்து, திருச்சபை, மனிதர்களால் மதிக்கப்படுதல் ஆகியவற்றை வைத்து, மறுபுறத்தில் தேவதயவை வைத்து, தேவ தயவிற்காக இந்த வாழ்க்கையை பரிமாறிக்கொள்வாரா ? என்று கேட்போமானால், அவர் தயங்கி, இறுதியாக இந்த வாழ்க்கையின் காரியங்களுக்கு ஆதரவாகவே முடிவெடுப்பார்.

இதற்கான காரணம், அப்படிப்பட்டவர்கள் தேவ தயவை உயர்வாக மதித்துப் போற்றுவதில்லை என்பதேயாகும். அவர்கள் சர்வவல்லவரைப் பற்றி குறிப்பிட்ட காரியங்களைக் கேட்டும் விசுவாசித்தும் இருக்கிறார்கள், அவைகளில் சில சரியானவை, சில தவறானவை. ஆனால் தேவனுடைய குணஇயல்பு மற்றும் திட்டம் பற்றிய தவறான அறிவிப்பு, அவர்களை சூழ்ந்திருக்கிற உலகப்பிரகாரமான செல்வாக்குடன் ஒன்றிணைந்து இருப்பது ஆகியவை, அவர்கள் கற்றிருக்கிற சத்தியங்களை பெருமளவில் நடுநிலைப்படுத்தி, சரியீடுசெய்து, பயனற்றதாகச் செய்து, காணாதவைகள் மீதான அவர்களின் நம்பிக்கையை குறைக்கிறது. இதன்மூலம், உலகப்பிரகாரமான விருப்பங்கள் தேவதயவின் மீதான அவர்களின் புரிந்துகொள்ளுதலை.. பத்திலிருந்து ஒன்றாகக் குறைத்து மதிப்பிடுகிறது.

யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டத்தின் மூலம் கர்த்தருடைய அன்பிரக்கத்தையும், கிருபையையும் காண வந்திருக்கிறவர்கள், அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக ஆகியிருப்பார்களானால், சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பார்கள். ஒருவேளை, அவர்கள் நித்திய வேதனைக்குரிய இடம் இல்லை என்பதையும், தேவனுடைய அன்புள்ள திட்டம் முழு மனித சந்ததியையும் உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதையும் கண்டு, அவர்களின் இருதயங்கள் அவருடைய இந்த மாபெரும் அன்பின் வெளிப்படுத்துதலினால் பதில் செயலாற்ற தொடப்படாமல், வெறுமனே மகிழ்ச்சியடைகிறவர்களாக இருப்பார்கள். அவர்கள் தங்கள் வழியில் செல்வார்கள், அவர்கள் தப்பறையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம் என்று மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் அவர்கள் ஆண்டவரால் குணப்படுத்தப்பட்ட, 9 குஷ்டரோகிகளைப்போல இருப்பார்கள். எனினும் அவருக்கு மகிமைசெலுத்தவோ, அவருடைய ஊழியத்தில் தங்களைக் கொடுக்கவோ திரும்பிவர மாட்டார்கள். அந்தோ! இவர்களே பெரும்பான்மையானவர்களாக இருக்கிறார்கள். நாம் தற்போது நிரூபிக்கும் மகாநாளில் இருக்கிறோம். இந்த தீமையின் நேரத்தில் உள்ள சோதனையில் நிலைநிற்கக் கூடியவன் யார் ?

**தேவனே நம் ஆத்துமாவின் சூரியன்**

உண்மையான பரிசுத்தவான்களால் மிகவும் மதித்துப்போற்றப்படுகிற தேவனுடைய இந்த அன்பான தயவு, வெறும் எதிர்கால வளங்களையும் நம்பிக்கைகளையும் குறித்த தயவாக மாத்திரம் இல்லாமல், தற்காலத்திலும் ஆசீர்வதிக்கப்பட்ட உடைமையாக இருக்கிறது. படிப்படியாக, இவர்கள் கர்த்தருடனான ஒற்றுமை மற்றும் ஐக்கியம் என்ற பரிசைப் பெறுவதற்கு வருகிறார்கள். அந்த தோழமையில் ஏற்படும் எந்த குறுக்கீடும், அதன் அளவுக்கேற்ப ஆத்தும துயரத்தை வருவிக்கும். இந்தத் துயரம், வேறு எதுவும் நிரப்பமுடியாதபடி, வலிநிறைந்த வெறுமையைக் கொண்டுவரும். இந்த உணர்வு நாம் அடிக்கடி பாடுகின்ற கீர்த்தனையில் அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

என் அன்புத் தகப்பன், என் ஆத்துமாவின் சூரியன்

நீர் அருகிலிருக்கும்போது இரவேயில்லை என்றறிவேன்

உம்முடையஊழியனின் கண்களிலிருந்து உம்மை மறைக்க

ஆ, பூமியில் பிறக்கும் எந்த மேகமும் எழும்பாது.

தேவனுடைய உண்மையான பிள்ளை அவருடன் மிகவும் நெருக்கமாக நடப்பார். சுபாவ மனிதனுக்கு இனிமையாயிருக்கிறதும், விலையேறப்பெற்றதுமாகிய எதுவும், அவனுடைய பிதாவின் முகத்தை அவனிடமிருந்து மறைப்பதற்கு அனுமதிக்கப்படாது. இது வேறு எதனுடனும் ஒப்பிடமுடியாத பேராபத்தாக மதிப்பிடப்படும். மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்கிறதற்கு வந்திருக்கிற தன் பரலோக நண்பனுக்கும் தனக்கும் இடையே வருகிற

அன்பிற்குரிய வலதுகரம் போன்ற எதையும் துண்டிக்கவோ அல்லது விலைமதிப்பற்ற கண் போன்ற எதையும் தன் ஜீவியத்திலிருந்து பிடுங்கவோ விரும்புவார். தேவன் இவர்களுக்கு உண்மையாகவே அவர்களின் ஆத்தும சூரியனாயிருக்கிறார். அவர் இல்லாதவர்களின் வாழ்க்கை இரவின் அந்தகாரத்தைப் போலிருக்கும்.

**இருள் ஒளியைப் பகைக்கும்**

கிறிஸ்துவின் சீஷர்கள் என்று சொல்லிக்கொள்கிற சிலர், கிறிஸ்தவ ஜீவியமானது பூமிக்குரிய நட்புக்களை இழக்காது என கூறக்கூடும். அப்படிப்பட்ட கருத்து மிகைப்படுத்தப்பட்ட ஒன்று. அதாவது, இது ஒரு கிறிஸ்தவனுக்கு எதிர்மாறான கண்ணோட்டமாயிருக்கிறது. என்ன தேவையாய் இருக்கிறதோ, அதற்கு அத்தகைய விளைவை ஏற்படுத்தும் செயல்முறை நியாயமற்றது என கூறலாம். ஆனால் அப்படியல்ல! நம் போதகர் அப்போது பேசிய வார்த்தைகள் இன்றும் உண்மையாயிருக்கிறது. "நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதை சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினால் உலகம் உங்களைப் பகைக்கிறது" (யோவான் 10:19). அப்போஸ்தலரின் அறிவிப்பு இன்னும் நன்மையை பற்றிக்கொண்டிருக்கிறது; "அன்றியும் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2தீமோ 3:12).

நம் போதகர் சமூக அந்தஸ்தையும்அவருடைய நாளின் சபை அமைப்புக்களுடனான தயவையும் இழந்து ஏன் பாடுபடவேண்டும்? வேதபாரகரும் மதத்தலைவர்களில் முக்கியமானவர்களும், தங்கள்முகத்தை அவரிடமிருந்து ஏன் மறைக்கவேண்டும்? இறுதியாக அவரை சிலுவையில் அறையும்படி அவருக்கு எதிராக மிகவும் மனக்கசப்புள்ளோராக ஏன் ஆகவேண்டும்? அவர் தரப்பில் தீமையான காரியங்கள் இருந்ததின் காரணத்திலா? இல்லை. அவர் நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்தார். அவர் சத்தியத்தைக் கூறியதால் இப்படி நடந்தது. தங்களைத் தாங்களே அப்படிப்பட்டவர்களாக உணர்ந்துகொள்ளும்படியாக, சத்தியங்களை அவர்அறிவித்தார். ஆனால் அவர்கள் அவைகளோடுகூட முன்னோர்களின் பாரம்பரியங்களை அதிகம் கலந்ததினால், நம் கர்த்தருடைய பணியையும், போதனைகளையும், நெறிதவறிய கண்ணோட்டத்தில் எடுத்துக்கொண்டு, மிகவும் முட்டாள்தனமானவர்களாக, தள்ளாடுகிறவர்களாக, குருடானவர்களாக இருந்தனர். அவர்களுடைய இருதயங்கள் தேவனுக்கு முன்பாக சரியான மனப்பான்மையில் இல்லை. "இருள் ஒளியைப் பகைக்கிறது".

போதகர் அடைந்த துன்பங்கள், வெளிப்புற உலகத்திடமிருந்து வரவில்லை, மாறாக, அவர் காலத்தின் பரிசுத்த ஜனங்கள் என்று சொல்லிக்கொண்டவர்களிடமிருந்தே வந்தது. அன்றிலிருந்து அது எப்போதும் இருந்துவருகிறது. இன்றும் அப்படியே இருக்கிறது. தற்போது சத்தியத்தை எதிர்ப்பவர்கள், சபைக்கு வெளியே இருக்கும் உலகின் ஜனங்கள் அல்ல, இதில் சில விதிவிலக்குகள் இருக்கலாம். மாறாக, சாத்தான் தன் தவறான போதனைகள் மற்றும் தவறாக திரித்துக்கூறியவைகளால் குருடாக்கப்பட்ட, வைராக்கியமுள்ள சபைப் பிரிவினர்களாக இருக்கிறார்கள். எனவே நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. நம் கர்த்தர் அறிவித்ததுபோல், எங்கெல்லாம் சத்தியம் செல்கிறதோ, அது பிரிப்பதற்கான ஒரு பட்டயமாகவே இருக்கும். இயேசுவின் பின்னடியார்களுக்கு இந்த நிபந்தனைகள் பரிசோதிக்கும் ஒரு சோதனையாக இருக்கும். சத்தியத்திற்கு உண்மயாயிருப்பதனால் வரும் வெறுப்பு, ஏளனம், அவமதிப்பு ஆகியவற்றை தாங்கிக்கொள்ள விருப்பமுள்ளவர்களாக இருக்கிறோமா? நம் பிதாவின் தயை நிறைந்த அன்பு, முழு உலகத்தின் தயை மற்றும் புன்னகைகளைவிட நமக்கு அதிகமதிகமாக இருக்கிறதா? ஜீவனைக் காட்டிலும் அவரது தயை அதிகமாக இருக்கிறதா?

**யுகங்களின் மகிமையான சுரமண்டலம்**

இப்படி இருக்குமானால், அவருடைய நாமத்தில் நாம் முன்னோக்கிச் செல்லமுடியும். நாம் அவ்வாறு செல்லும்பொழுது, சந்தோஷமடையவேண்டும். நம் உதடுகளினால் அவரைத் துதித்து, அவர் நம் வாயில் வைத்த புதிய பாட்டைப் பாடுகிறோம். அதுவும் நம் தேவனின் அன்பிரக்கத்தைப் பாடுகிறோம். இந்தப் பாடலைப் பாடுவதற்கு கொஞ்சம் விலைகொடுக்க நேரிடும். தேவனுடைய சுரமண்டலத்தை வாசிப்பதற்கு கற்றிருப்பவர்கள், அதன் எல்லா கம்பிகளையும் பரிபூரண இசைவிற்கேற்ப சுருதிசேர பெற்றிருப்போர் மட்டுமே இந்த, "மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும்" முறையாக வழங்கமுடியும். இந்த அற்புதமான சுரமண்டலத்திலிருந்து இப்படிப்பட்ட மெல்லிசையை இயற்றுவதற்கு, முன்பு சாத்தியமில்லாதிருந்தது, இன்றைய நாளிலேயே அது சாத்தியமாயிற்று. இதற்கு முன்பு அதன் யாழ் நரம்புகள் முறையாகப் பொறுத்தப்பட்டு சுருதி சேர்க்கப்படவில்லை. தற்போது அதன் இசை மயக்குகிறது. இப்போது யுகங்களைப் பற்றிய இந்த சுரமண்டலத்தை எடுத்து, அதன் இசை நரம்புகளை மீட்டுவோமாக! இந்த

அற்புதமான மகிழ்ச்சியூட்டுகிற புதிய பாடலை, ஆவியுடனும் புரிந்துகொள்ளுதலுடனும் பாடுவோமாக!

------------------

**R 5444**

## “ஐஸ்வரியவான் பாதாளத்திலும், தரித்திரன் பரலோகத்திலும்”

## “RICH TO HELL - POOR TO HEAVEN’

**ஆதார வசனங்கள் : லூக்கா 16:19–31.**

**திறவுகோல் வசனம் : நீதிமொழிகள் 21:13;**
**“ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்”**

ஒவ்வொரு நாளும் ஆடம்பரமாக செலவுசெய்து, இரத்தாம்பரமும், விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து வாழ்ந்த எல்லா ஐஸ்வரிய ஆண்களும் பெண்களும், நித்தியகாலமாக துயரப்படவேண்டும்என்று பொருள்படும்படி, மேற்கண்ட ஆதார வசனங்களில் நம் கர்த்தர் பேசினாரா? பரலோகத்துக்குச் செல்ல வேண்டுமானால், நாம் ஏழைப் பிச்சைக்காரர்களாக, உடல் முழுவதும் புண்களாயிருந்து, நாய்கள் வந்து புண்களை நக்கும் நிலையில், ஐஸ்வரியவானின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைக்கொண்டு பசியாற்றுபவர்களாக இருக்கவேண்டுமா? வருங்கால வெகுமதிகளுக்கும் தண்டனைகளுக்கும், ஒருவருடைய குணாதிசயம் எதுவுமே செய்யமுடியாதா? நித்திய காலத்துக்கும், ஐஸ்வரியவான் அக்கினியில் வேதனைப்படுவதும், தரித்திரன் ஆசீரை அனுபவிப்பதும், நித்திய துன்பத்தில் ஐசுவரியவான் இருப்பதை கனப்படுத்தப்பட்ட தரித்திரன் காண்பதும் நீடித்திருக்குமா? முடிவை அதன் துவக்கத்திலேயே அறிந்திருக்கிற, சகல ஞானமும் அன்பும் நிறைந்த சிருஷ்டிகருடைய ஏற்பாடு இப்படியாக இருக்குமா?

இந்த உவமை தேவனுடைய ஜனங்களில் பரிசுத்தவான் நிலையில் முன்னேறுவோரின் சிந்தையை அநேக வருடங்களாக துயரத்தில் ஆழ்த்த காரணமாயிருக்கிறது. அவர்களுடைய இருதயமும் தலையும் கலகம் ஏற்படுத்தி வந்திருக்கிறது. ஆபிரகாம் பெரும் ஐஸ்வரியவானாக இருந்தார் என்றும், அதுபோலவே ஈசாக், யாக்கோபு, தாவீது ராஜா, சாலமோன் ராஜா போன்றவர்களும் ஐஸ்வரியவான்களாக இருந்தனர் என்றும் நாம் நினைவுகூர்கிறோம். தேவன் தாமே மாபெரும் ஐஸ்வரியவானக இருப்பதையும் நினைவில் வைத்திருக்கிறோம். பின்பு, எபிரேய மற்றும் கிரேக்க பாஷைகளில் இப்பாடத்தை நாம் நோக்கிப் பார்க்கும்போது, ஆபிரகாம் கெஹன்னாவுக்கு – அதாவது நம்பிக்கையற்ற நிலைக்கு, இரண்டாம் மரணத்துக்குப் போகவில்லை, மாறாக அவர் ஷியோலுக்கு, ஹேடஸ்க்கு, கல்லறைக்கு, பாதாளத்துக்கு, மரண நிலைக்கு, அக்கினியில்லாத இடத்துக்குச் சென்றார் என்று கண்டடைகிறோம்.

நம்முடைய அதிகஅறிவு, இரகசியத்தை அதிகரிக்கிறது. ஷியோல், ஹேடஸ் மற்றும் கல்லறைகள் அழிக்கப்பட இருப்பதாகவும், உயிர்த்தெழுதலில் எல்லோரும் அதிலிருந்து வெளியே கொண்டுவரப்படுவார்கள் என்றும், வேதாகமம் அறிவிக்கிறது. வேறு எந்த வசனமும், இந்த உவமையோடு இணங்குவதாக கருதப்படவில்லை. இவ்வுவமை ஒரு பிரிவாக அல்லது வகுப்பாக தன்னில்தானே நிலைத்திருக்கிறது. இதற்கு விதிவிலக்காயுள்ள வெளிப்படுத்தின விசேஷம், வாதிக்கப்படப்போகும் அடையாளமான மிருகம் மற்றும் அடையாளமான கள்ளத்தீர்க்கதரிசியைப்பற்றி பேசுகின்ற ஒரு வசனப்பகுதியை மட்டுமே அதற்கு ஆதரவாக நம்மால் உபயோகிக்கமுடியும். இவ்வாறு சபையிலுள்ள சிந்திக்கும் ஜனங்கள், இப்பாடத்தின் கதை மூலம் இடறுகிறார்கள், குழப்பமடைகிறார்கள்.

### தற்போது எல்லாம் தெளிவாகவும், எளிமையாகவும் உள்ளது

நமது பாடம் ஒரு உவமை என்று நாம் தற்போது காண்கிறோம். நம் கர்த்தரால் கூறப்பட்ட மற்ற உவமைகளையும் உவமானங்களையும் போல, இதையும் நேரடி அர்த்தமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. உதாரணமாக, “மனுஷகுமாரனின் மாம்சத்தைப் புசித்து, அவரது இரத்தத்தில் பானம்பண்ணினாலொழிய உங்களுக்குள் ஜீவன் இல்லை” ; மேலும் “உன் கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதை பிடுங்கி எறிந்துவிடு.. உன் கை உனக்கு இடறலுண்டாக்கினால் அதை துண்டித்துவிடு” போன்றவை. இயேசு தம் ஜனங்களுடன் மெய்யாகவே உவமைகளால் மட்டுமே பேசினதாக நாம் காண்கிறோம்(மத் 13:34). பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தஆவி அவர்களுக்கு தகுதியை அளிக்கத் துவங்கும்வரை, ஒருவரும் அவருடைய போதனையின் ஆழங்களுக்குள் செல்லத் தயாராயில்லை.

இப்பொழுது அனைத்தும் எவ்வளவு எளிமையும், அழகானதாயுமிருக்கிறது! வேதாகமத்தை தற்போதைய வெளிச்சத்தில் புரிந்துகொள்ளும்பொழுது, தெய்வீக குணாதிசயம் பிரகாசிப்பதையும், அதன் நீதி, ஞானம், அன்பு, வல்லமையின் அழகையும் கண்டு, தேவனுடைய பிள்ளைகளில் அநேகர் சந்தோஷப்படுகின்றனர்.

நமது பாடம் ஒரு உவமையாயிருந்தாலும், நம்மால் புரிந்துகொள்ள சிரமமானதல்ல. நாம் பார்த்தபடி, இவ்வுவமையை நேரடி அர்த்தத்தில் புரிந்துகொள்வோமானால், தரித்திரர் அனைவரும் பரலோகத்துக்கு செல்வார்கள் என்றும், செல்வந்தர்கள் நரகத்துக்குச் செல்வார்கள் என்றும் முட்டாள்தனமாக யூகிக்க ஏதுவாகிறது. தரித்திர மனிதன் நல்லவன் என்றோ, ஐஸ்வரியவான் தீயவன் என்றோ குணாதிசயத்தைக் குறித்து இவ்வுவமை பேசவில்லை. ஒரு உவமையாக இதைக் கண்ணோக்கும்போது, சொல்லப்பட்ட காரியத்தின்படியே அர்த்தம் எடுக்க வேண்டியதில்லை என்று நாம் காண்கிறோம். இவ்வாறாகவே மற்ற உவமைகளில் செம்மறியாடு மற்றும் கோதுமை மணி தேவனுடைய பிள்ளைகளைக் குறிக்கின்றது. களைகளும், வெள்ளாடுகளும், இவ்வுலகின் தேவனாகிய விரோதியால் ஆதிக்கம் பண்ணப்பட்டவர்களைக் குறிப்பிடுகின்றது.

**உவமையில் கூறப்பட்ட ஐஸ்வரியவான்கள்**

நாம் ஆராய்ந்துவருகிற இவ்வுவமையில், ஐஸ்வரியவான் என்பது ஒரு வகுப்பாரையும், தரித்திர மனிதனாகிய லாசரு வேறொரு வகுப்பாரையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை என்னவென்று காண்போம்; யூத தேசமே ஐஸ்வரியவானாகிய மனிதன், பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாக, இத்தேசம் தேவனுடைய தயவைப் பெற்று வந்திருந்தது. யூதருக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழாக, தீர்க்கதரிசிகளும், ஆசீர்வாதங்களும், வாக்குத்தத்தங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. இவைகள் இரத்தாம்பரம், மெல்லிய சணல்நூல் மற்றும் ஆடம்பர பந்திமேஜை என அடையாளமாக கூறப்பட்டன. மெல்லிய சணல்நூல் –அவர்களுடைய நிழலான பலிகள் மூலமாக அடையாளமான( Typical) நீதிமானாகுதலைக் குறிப்பதாயும், அவர்களுடைய இரத்தாம்பர ஆடை– அவர்கள் அடையாளமான ராஜ்யமாக இருந்ததற்கான ராஜரீகஅடையாளமாயும் இருந்தன. அவர்களுடைய ஆடம்பர பந்திமேஜை தெய்வீக வாக்குத்தத்தங்களை குறிப்பிடுவதாக உள்ளது. பரிசுத்த பவுல் ரோமர் 11:9இல் கூறின வார்த்தைகள் இதைக் குறித்துக் காட்டுகின்றன.

இயேசுவின் நாளில் யூதருக்கான தயவு படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. கிபி 70இல் அவர்கள் முற்றிலுமாக தயவிலிருந்து அறுப்புண்டுபோனதை, யூதர்கள் அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். 40 வருட இடைக்கால வருடங்களில், ஐஸ்வரியவானாகிய யூத தேசம், நோயுற்று, மரித்து அடக்கம் பண்ணப்பட்டது. ஒரு தேசமாக அவர்கள் நினைவற்ற நிலைக்கு(hades) கல்லறைக்கு சென்றனர். அவர்களுடைய உயிர்த்தெழுதல் இன்னும் நிறைவேறியிருக்கவில்லை, சீயோன் இயக்கம் அதற்கான துவக்கமாக மட்டுமே இருக்கிறது.

ஒரு தேசமாக அவர்கள் மரித்து அடக்கம் பண்ணப்பட்டபோதிலும், யூதர்கள் தனி நபர்களாக கடந்த 19 நூற்றாண்டுகளாக உயிர்த்துடிப்புடன் நன்கு ஜீவித்துவருகின்றனர். அவர்கள் ஆத்துமாவில் மிக்கவேதனை அடைந்திருந்து, சிலசமயங்களில் துன்பங்களை அடைந்திருக்கின்றனர். அந்தோ! இயேசுவின் நாமத்தைப் பகட்டாக தரித்திருப்போர், தங்கள் நடைமுறைகளில் அவரை மறுதலிக்கிறார்கள். இந்த எல்லா நூற்றாண்டுகளிலும் யூதர்கள் தேவனிடத்தில் கதறிஅழுதவர்களாயிருந்தனர். இவ்வுவமையில் தேவன் விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமைக் குறிக்கின்றார். தேவனுக்கும் இவர்களுக்குமிடையே பிரிவினையின் பெரும்பிளவு அடைந்துள்ளனர் என்பதே ஒரே பதிலாயுள்ளது. இதே நிலைமை அதிக காலம் நீடிக்காது என்பதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். புதிய யுகம் விடியலாக வருகிறது, இதில் ஐஸ்வரியவான் கல்லறையாகிய மரண நிலையிலிருந்து(hades) வருவான், இஸ்ரயேலர்கள் ஒரு தேசமாக மீண்டும் குடியமர்த்தப்படுவார்கள். அவர்களில் யார் அவசியமான பாடங்களைக் கற்கிறார்களோ, அவர்களிடத்தில் தேவதயவு மீண்டும் வந்துசேரும்.

**உவமையில் கூறப்பட்ட தரித்திர மனிதன்**

உவமையில் கூறப்பட்ட தரித்திர மனிதன், சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்ட வகுப்பாரை குறிப்பிடுகிறார். ஆயக்காரரும் பாவிகளுமாக அந்த வகுப்பார் இருந்து, தேவதயவிலிருந்து தங்களையே தனிமைப்படுத்திக்கொண்டனர். இது புறஜாதியாரையும் உள்ளடக்கியதாக இருந்து, இவர்களுக்கு தெய்வீக தயவு ஒருபோதும் கொடுக்கப்படவில்லை. ‘‘இஸ்ரயேலருடைய காணியாட்சிக்கு புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும்..’’–எபே2:12. இவர்கள் மெல்லிய சணல் நூலாகிய அடையாளமான நீதிமானாக்கப்படுதலை அடையாமலும், இரத்தாம்பரத்தைக் குறிக்கின்ற, ராஜ்யத்தில் பங்கடைவதற்கேதுவான தேவதயவில் பங்குபெறாமலும் இருந்தனர்.

வாக்குத்தத்தங்களிலும் எதுவும் அவர்களுக்குரியதாயிருக்கவில்லை. ஐஸ்வரியவானின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளை மட்டுமே அவர்களால் பெற்றுக்கொள்ள முடியும்.

இயேசுவால் இந்த வகுப்பாருக்கு அப்படிப்பட்ட இரண்டு துணிக்கைகள் கொடுக்கப்பட்டதை வேத வசனங்கள் எடுத்துக்காட்டாக காண்பிக்கின்றன. நூற்றுக்கதிபதியாகிய ரோமானியனுடைய ஊழியக்காரனை அவர் குணப்படுத்தியது, யூதர்களுடைய வேண்டுகோளை ஏற்று செய்யப்பட்ட சலுகையாகவே இருந்தது. நூற்றுக்கதிபதி தங்களுக்கு நண்பனாக இருந்து, யூத ஆலயம் கட்டுவதற்கு நன்மைசெய்தார் என்று இயேசுவிடம் அவர்கள் அறிவித்தனர். இந்த ஊழியனை குணமாக்கியது ஒரு துணிக்கையாயிருந்தது. அதுபோலவே, ஒரு கிரேக்க ஸ்திரீ இயேசுவினிடத்தில் வந்து, பிசாசு பிடித்திருந்த தன் மகளை குணப்படுத்தும்படி கெஞ்சிக் கேட்டபோது, அவள் ஒரு துணிக்கையை பெற்றுக்கொண்டாள். எஜமான் அவளுக்கு பிரதியுத்தரமாக, ''பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்களுக்குப் போடுவது முறையானதல்ல'' என்றார். இங்கு புறஜாதியாரை, நாய்கள் என்ற சொல்நடையில் அழைப்பது யூதருக்கு வழக்கமாயிருந்தது. அந்த கிரேக்க ஸ்தீரீ ஒரு யூத ஸ்திரீயல்லாததால், தேவ தயவை கோருவதற்கு தகுதியற்றவளாயிருந்து, பதிலளித்தாள்; ''ஆம் ஆண்டவரே, பிள்ளைகளின் மேஜையிலிருந்து கீழே விழும் துணிக்கைகளை நாய்கள் தின்னுமே''. இயேசு அவளுடைய விசுவாசத்தை கவனித்து, அவள் விரும்பின துணிக்கையை அவளுக்குத் தந்தார்.

யூதர்கள் தாங்கள் பெற்றிருந்த தயவோடு மரித்ததுபோலவே, புறம்பாக்கப்பட்டிருந்த ஆயக்காரரும், பாவிகளும், புறஜாதியாரும் தயவற்றநிலையில் மரித்தனர். அவர்களில் சிலர், தேவ தயவுகளைப்பெற ஆவலாயிருந்தனர். அவருடைய வாக்குத்தத்த வார்த்தைகள்மேல் பசி தாகமுள்ளோராயிருந்து, அவரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். பரிசேயர்களால் தள்ளப்பட்டிருந்த ஆயக்காரர்கள், பாவிகள் மற்றும் புறஜாதியாரை குறிக்கும் இந்த லாசரு வகுப்பாரால், ஆதிகால சபை உண்டாக்கப்பட்டிருந்தது. தேவனுக்கு அந்நியர்களாக இனியும் அவர்கள பிரிக்கப்பட்ட நிலையிலிராமல், தேவனுடைய பிள்ளைகளாகவும், அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு வாரிசுகளாகவும் ஆனார்கள். இந்த உவமையில், அவர்கள் ஆபிரகாமின் கரங்களிலுள்ள பிள்ளைகளாக குறிப்பிடப்படுகிறார்கள். நிழலில், மாம்சத்தின்படி ஆபிரகாமின் வாக்குத்தத்தத்துப் பிள்ளையாக ஈசாக் இருந்தார். நிஜத்தில், ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாக இயேசுவும் அவருடைய பின்னடியார்களும் இருந்து, தேவனுடைய தயவுக்குள்ளும், அவருடைய அரவணைப்புக்குள்ளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். ''நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தப்படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள் – கலாத் 3:29 என்று பரிசுத்த பவுல் எழுதுகிறார்.

**பெரும் பிளவு நிலைநிறுத்தப்பட்டது**

யூதத்துவம் மற்றும் கிறிஸ்தவத்துக்கிடையில் 18 நூற்றாண்டுகளுக்கு மேலாக பெரும் பிளவு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதி முழுவதும் தேவனுக்கு சமீபமாக வர எந்த யூதனும் அனுமதிக்கப்படவில்லை, அல்லது எந்த புறஜாதியானும் யூதனுடைய முந்தைய ஸ்தானத்தை எடுக்க அனுமதிக்கப்படவில்லை அல்லது கிறிஸ்துவைத் தவிர வேறு எவ்வகையிலும் தயை பெற முடியவில்லை. தெய்வீகத்திட்டத்தில் இந்த பிளவானது மாற்றமுடியாமல் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. ''நாம் இரட்சிக்கப்படுவதற்கு பரலோகத்தின் கீழ், மனுஷரிடையே வேறு நாமம் அருளப்படவில்லை''. அதன்படி, நாம் தேவனோடு இருதயப்பூர்வமான ஐக்கியம் கொள்கிறோம். இரண்டாம் வருகையிலிருந்து இஸ்ரயேலருக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து பின்பு அவர்களால் நிராகரிக்கப்பட்டு, சிலுவையில் அறைந்ததிலிருந்து இந்த பெரும் பிளவானது உள்ளது.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், மற்றுமொரு யுக மாறுதல் ஏற்படவிருப்பதை அவருடைய வார்த்தை குறிப்பிட்டுக் காட்டுவதற்காக தேவனுக்கு நன்றி. அப்பொழுது, விசுவாசத்தினால் தற்போது தேவபிள்ளைகளாயிருக்கிற லாசரு வகுப்பார் திரைக்கப்பால் உண்மையாகவே அவருடைய பிள்ளைகளாக மகிமைப்படுத்தப்படுவர். தங்கள் கர்த்தராகிய இயேசுவோடுகூட இணைந்து, ராஜ்யத்தில் அவருடைய மணவாட்டியாகவும், உடன் சுதந்திரராயுமிருந்து, உலகை அவர்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவர். அப்பொழுது ஐஸ்வரியவானுக்கு என்ன சம்பவிக்கும்? ஓ! அவன் பாதாளமாகிய கல்லறையிலிருந்து உயிர்த்தெழுதலை அடைவான்.

தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரிய தளத்தில், லாசரு வகுப்பாரை பிரதிநிதித்துவப்படுத்தும்போது, மற்றொரு வகுப்பாராகிய யூதர்கள், பூமிக்குரிய தளத்தில் பிரதிபலிக்கிறார்கள். இயேசுவை சிலுவையிலறைந்த யூதர்கள், மேசியாவோடு இணைந்து ஆவிக்குரிய பேரரசில் பூமிக்குரிய பிரபுக்களாக ஏற்படுத்தப்படமாட்டார்கள், ஆனால் அவர்களது

சகோதரர்களில் சிலரை, பிதாக்கள் என்று இவர்கள் அழைத்த வகுப்பாரே பிரபுக்களாக இருப்பர். வேதாகமத்தில் இவர்கள் ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, மற்றும் எல்லா தீர்க்கதரிசிகள் என்று அறியப்படுகிறார்கள். பரிசுத்த பவுல், எபிரேயர்**11:32–40**இல் விவரித்துள்ளபடி, இவர்கள் அனைவரும் யூதயுகத்தின்போது, தேவனிடத்தில் தங்கள் உண்மைத்தன்மையையும், விசுவாசத்தையும் நிரூபித்தவர்கள்.

பரிசுத்த பவுல் ரோமர் **11:25–33** வசனங்களில், தெய்வீக தயவுக்கு யூதர்கள் சீர்பொருந்துவதைக் குறிப்பிடுகிறார். தேவபிள்ளைகளாக தற்போது இருக்கிற நாம், முன்பு எப்போதும் அந்நிலையில் இருந்ததில்லை. ஆனால் இஸ்ரயேலர் தேவ தயவிலிருந்து துண்டிக்கப்பட்டபொழுது நாம் தெய்வீக தயவை பெற்றுக்கொண்டோம். ஆகவே தேவதயவிலிருந்து துண்டிக்கப்பட்ட இஸ்ரயேலர்கள், ஏற்றவேளையில், நம் தயவின் மூலமாக தேவதயவைப் பெற்றுக்கொள்வார்கள். அதாவது, ஆவிக்குரிய இஸ்ரயேலராக, சபையானது மகிமை கனம் சாவாமையை பரிசாக அடையும்வேளையில், தேவ தயவிலிருந்து பிளவுபட்டிருக்கிற சுபாவ இஸ்ரயேலர்கள் கடந்துபோவர், அப்பொழுது மாம்சீக இஸ்ரயேலருக்கு தயவு திரும்பக் கிடைக்கும். ஆயிரமாண்டு யுகத்தின்போது, மகிமையடைந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர் மூலமாக, மாம்ச இஸ்ரயேலர்க்கு தயவு வந்துசேரும். பின்பு, எல்லா தேசங்களுக்கும் ஜனங்களுக்கும் பாஷைக்காரருக்கும் அது நீட்டிக்கப்படும்.

''உன் வித்துக்குள் பூமியின் சகல குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்'' என்பதே தெய்வீக வாக்குத்தத்தம். ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகிய ''திருச்சபை'', இந்த வாக்குத்தத்தத்தின் முதலாவது பங்கைப் பெற்றுக்கொள்ளும். மேலும் ஆபிரகாமின் மாம்சீக வித்தானது இரண்டாம் பங்கை அடைவர். ஆனால் மனுக்குலத்தின் சாபத்தை அகற்றுவதற்கும், அதேசமயம், மனுக்குலத்தில் யார் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களுக்கு தயவுகளையும் ஆசீர்வாதங்களையும் ஊற்றுவதற்கும் இந்த இரு வகுப்பாரும் கர்த்தரால் பயன்படுத்தப்படுவார்கள்.

**ஐஸ்வரியவானுக்கு ஐந்து சகோதரர்**

அக்கினி ஜுவாலையில் நாவறண்ட நிலையில், ஒரு துளி தண்ணீரால் நாவை குளிரப்பண்ணும்படி ஜெபிக்கும் ஐஸ்வரியவானை உவமை பிரதிபலிக்கிறது. இது உருவகமாகவும், உவமைக் கதையாகவும் பெரும் வேதனையிலுள்ள யூத ஜனங்களை பிரதிபலிக்கிறது. தங்கள் உபத்திரவங்களில் சில உதவிகளைச் செய்யும்படி கிறிஸ்தவர்களை அனுமதியும், என்று தேவனிடத்தில் கேட்கிறார்கள், ஆனால் யூதர்கள் தேவனிடத்தில் உதவிகோரி எப்பொழுதாவது விண்ணப்பித்ததுண்டா? கடந்த காலத்தில் தாங்கள் அடைந்திருந்த துயரங்களிலிருந்து விடுதலை தரும்படி அவர்கள் ஜெபித்ததுண்டா? ரஷ்யாவில் இன்னும் ஓரளவுக்கு துன்பம் அடைந்துவருகிறார்களே! நிச்சயமாக அவர்கள் விண்ணப்பித்திருந்தார்கள்! எல்லாவற்றிற்கும் மேலாக, லாசரு வகுப்பாரின் பிரதிநிதிகளிடத்தில், அதாவது கிறிஸ்தவர்களின் பிரதிநிதிகளிடத்தில் அவர்கள் முறையிட்டார்கள், அவர்கள் மூலமாக விடுவிக்கும்படியும், சுமையை தணிக்கும்படியும் விரும்பினார்கள்.

ஐஸ்வரியவான், தான் அடைகின்ற துன்பத்தில் தன்னோடு சேர்ந்து துன்புறும் அபாயம் தன் ஐந்து சகோதரர்களுக்கும் உள்ளதைக்கூறி, உவமை இன்னும் கூடுதலான உண்மையை வளர்க்கிறது. யார் இந்த ஐந்து சகோதரர்கள்? பிரதானமாக பென்யமீன் மற்றும் யூதா கோத்திரத்தாரே இயேசுவின் நாளில் பாலஸ்தீனாவில் இருந்த யூதர்களக குறிக்கப்படுகிறார்கள் என நாம் பதிலுரைக்கிறோம். அதே வேளையில், பெரும்பான்மையான **10** கோத்திரத்தார், சுற்றிலுமுள்ள பல்வேறு தேசங்களில் சிதறுண்டிருந்தனர். இங்கு எழும் கேள்வி – பாலஸ்தீனாவிலிருந்த யூதர்கள் மட்டும் பெரும்பாலான தேவ தயவுகளைப் பெற்று அனுபவித்திருந்து, இந்த கடுமையான சோதனை அனுபவங்களால் பாதிக்கப்பட்டிருந்தார்களா? அல்லது சுற்றிலும் சிதறுண்டிருந்த யூதர்களையும் இது உள்ளடக்கியதா? இதற்கான பதில், உவமையில் கொடுக்கப்பட்டுள்ளது. '' அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும்''. இவ்வார்த்தைகள் யூதர்களை மட்டுமே தொடர்புபடுத்துவதை நிரூபிக்கின்றன. மோசேயும் தீர்க்கதரிசிகளும் புறஜாதியாருக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே ஐந்துபேர் என்பதும் முழு இணக்கமுடையதாக உள்ளது. அதேசமயம், யூதா மற்றும் பென்யமீன் ஆகிய இரு கோத்திரத்தார், ஒரே ஐஸ்வரியவானை குறிப்பிடுவதாயும், அதே விகிதாச்சாரப்படி, மற்ற **10** கோத்திரத்தார் **5** சகோதரர்களையும் பிரதிபலிக்கிறார்கள்.

அவ்வாறே, சுவிசேஷ செய்தியும் பாலஸ்தீனாவிலிருந்த யூதரிடத்தில் துவங்கி, ஒவ்வொரு தேசத்திற்கும் வியாபித்தது. அப்போஸ்தலர் பவுல் புறஜாதியாரின் எந்தப் பட்டணங்களுக்கும் சென்று, முதலாவது யூதர்களுக்கு பிரசங்கித்துக் கூறினார்; ''முதலாவது

உங்களுக்கே தேவ வசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது, நீங்களோ தேவகிருபையைத் தள்ளினபடியால், இதோ நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம் என்றார்(அப்13:46,47). வேறு வார்த்தைகளில் கூறினால், பரீட்சையானது, எல்லா இஸ்ரயேலருக்கும் பொதுவானதாயிருந்தது.

இவ்வாறாக, இயேசுவின் போதனைகளிலிருந்த ஞானத்தின் ஆழம், நாம் கற்பனை செய்யக்கூடாத அளவிலிருந்ததை நாம் காண்கிறோம். மேலும் இருண்ட யுகங்களின் மிகவும் பயங்கரமான போதனைகள், நம் நிதானிப்புக்களில் விஷமேற்றி, நம் ஆவிக்குரிய பார்வையைக் கெடுத்தது.மேலும் கர்த்தருடைய வார்த்தையின் அழகை காணக்கூடாதபடி நம்மைத் தடைசெய்தது. வேதாகமத்தின்மீது புதியநாளின் வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

———————

**R 5445**

## "நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்"

## "WE ARE UNPROFITABLE SERVANTS'

**ஆதார வசனங்கள் : லூக்கா 17:1–10.**

**திறவுகோல் வசனம் :1கொரிந்தியர் 1:30**
**"மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டுவானாக"**

இந்தப் பாடமானது நான்கு பாகங்களைக் கொண்டதாகும். இவை ஒவ்வொன்றும் வெளிப்படையாகவே தனித்தன்மையானதும், வேறுபட்டவைகளுமாகும். இவ்வார்த்தைகளுக்கு இடையிலானதொடர்புகூட தெரிவிக்கப்படவில்லை. ஆயினும் இவை பரத்திலிருந்து வரும் ஞானத்தை வெளிப்படுத்துகிறது. இவைகளை நாம் அவைகளின் வரிசைப்படி கவனித்துப் பார்க்கலாம்.

இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம். இடறல்கள் என்ற வார்த்தையானது, குறிப்பாக தடுமாறிவிழுதலை அல்லது நேரடி அர்த்தத்தில் பார்க்கும்போது, கண்ணியில் சிக்குதலைக் குறிக்கிறது. இயேசுவின் அர்ப்பணம் பண்ணப்பட்ட பின்னடியார்கள், சிறியவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர், காரணம் இவர்கள் தேவனுடைய சித்தத்துக்கு முழுமையாக அர்ப்பணம் செய்து புதிய சிருஷ்டிகளாகி, புதிய பாதையில் தற்போதுதான் நடக்க ஆரம்பித்துள்ளனர். இவர்களைக் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் என்று பரிசுத்தவனாகிய பவுல் அழைக்கின்றார்(1கொரிந் 3:1). "சிறுபிள்ளைகள்" என்று பரிசுத்தவானாகிய யோவான் எழுதுகின்றார். இந்தக் குழந்தைப் பருவமானது தொடர்ந்து காணப்படக்கூடாது. கிருபையிலும்அறிவிலும்அன்பிலும் வளர்ச்சி காணப்படவேண்டும். பலமான குணலட்சணம் அடையப்படவேண்டும். இந்தக் குணலட்சணமானது ஞானமானதாகவும், பலமுள்ளதாகவும், கண்ணியில் அகப்படுத்தப்பட கடினமாயும் இருப்பது மட்டுமல்லாமல், குறைவாய் வளர்ந்துள்ள மற்றவர்களுக்கு உதவிபுரியக்கூடியதாயும் காணப்படவேண்டும்.

இவ்வாறாக சபையில் மிகவும் வளர்ந்தவர்கள் மூப்பர்களெனவும், நேரடி அர்த்தத்தில் மூத்த சகோதரர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள், சகோதரர்கள் மத்தியில் கர்த்தரை அடையாளப்படுத்துகின்றனர். மேலும் சில சமயங்களில் பரலோக ஆறுதலும், ஆலோசனையும் கடிந்துகொள்ளுதல்களும் இவர்கள் மூலமாய் இளைய சகோதர சகோதரிகளுக்கு கொடுக்கப்படுகிறது. சாத்தான் இந்த யுகத்தின் அதிபதியாக இருப்பதினாலும், பெரும்பான்மையான மனுக்குலத்தை இவன் தன்னுடைய செல்வாக்கின்கீழ் வைத்திருப்பதினாலும், தப்பறைகள், மூடநம்பிக்கைகள், பாவங்கள் முதலானவைகளினால் குருடாக்கி வைத்துள்ளபடியினாலும், கண்ணியில் அகப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது. "...அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்"(2கொரிந் 4:4). "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு.." என்று இயேசு குறிப்பிடுவதிலிருந்து, இங்கு இயேசு குழந்தைகளைப் பற்றிப் பேசவில்லை என்பது தெளிவாகின்றது.

இயேசுவின் பின்னடியார்களுக்கு, அதாவது அவருடைய சிறியவர்களுக்கு, அறியாமையினாலோ அல்லது உள்நோக்கமின்றியோ இடறல் உண்டாக்குகின்றவர்களை இயேசு தண்டிப்பார் என்றோ, அநீதியாக குற்றம் தீர்ப்பார் என்றோ நாம் அனுமானிப்பதில்லை. தம்முடைய பின்னடியார்களை, தம்முடைய சிறியவர்களை வஞ்சிப்பதற்கும், கண்ணியில் சிக்க வைப்பதற்கும், இடறச்செய்வதற்கும்,

சோர்வுபடுத்துவதற்கும், வேண்டுமென்றே முயற்சிப்பவர்களுக்கே இயேசு எச்சரிப்பு வழங்குகின்றார் என்றே நாம் யூகிக்கவேண்டும். கர்த்தருடைய பின்னடியார்களுக்கு எதிராக, துணிகரமாக மற்றும் வேண்டுமென்றே போடப்பட்ட திட்டங்கள் பற்றின சம்பவங்களை நாம் அனைவரும் கேட்டிருக்கின்றோம். மேலும் இது எந்தளவு மேலோங்கியிருந்தாலும், இதில் சாத்தானின் ஆவியே காணப்படுகின்றது.

வார்த்தைகள் சுட்டிக்காட்டுகிறபடி, சிலசமயம் தேவனுடைய உண்மையான ஜனங்கள்கூட, இவ்வாறாக சாத்தானுக்கான ஊழியங்களுக்குள் சிக்கிக்கொள்கின்றனர். “எதற்குக் கீழ்ப்படியும்படி ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள்”(ரோமர் **6:16**). தர்சு பட்டணத்து சவுல்கூட இவ்வாறாக கண்ணியில் சிக்கிக்கொண்டவராக, ஒரு குறிப்பிட்ட காலம் எதிராளியால் பயன்படுத்தப்பட்டவராக இருந்தார். மேலும் அறியாமையில், தான் இவைகளைச் செய்தபடியால் தேவன் தன்மேல் இரக்கம் காண்பித்ததாக சவுல் விளக்கம் அளிக்கின்றார். ஒருவேளை சவுல் மனதார, துணிகரமாய் இவைகளைச் செய்திருப்பாரானால், ஓர் அற்புதத்தை நிகழ்த்தி இவரை மீட்டுக்கொள்ளும் அளவுக்கு, இவரிடம் தேவன் இரக்கம் காண்பித்திருக்கமாட்டார் என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவேளை சவுல் தன்னுடைய துணிகரமான பொல்லாங்கான வழியிலேயே தொடர்ந்து காணப்பட்டிருந்தால், அவருடைய கழுத்தில் எந்திரக்கல் தொங்க விடப்பட்டு, அவரை கடலில் அமிழ்த்துவது நலமாயிருந்திருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம்.

ஏனெனில் ஒரு மனுஷன் இப்படியாக கடலில் அமிழ்த்தப்படும்போது, தன்னுடைய தற்கால ஜீவியத்தை இழந்துபோகிறவனாக மாத்திரமே காணப்படுவானே ஒழிய, மரணம் எனும் நித்திரையினின்று அவன் விழிக்கும்போது, ஆயிரவருட யுகத்திலுள்ள எதிர்கால வாழ்க்கையை இழந்துபோகிறவனாய் இருக்கமாட்டான். அப்போது அவன், பாவம் மற்றும் மரணத்தினின்று மீட்கப்படுவதற்கும், அறிவொளியடைவதற்குமான முழுவாய்ப்பையும், கீழ்ப்படிதல் மூலம் பெற்றுக்கொள்வான். ஆனால் இயேசுவின் பின்னடியார்களை வேண்டுமென்றே துன்பப்படுத்துகிறவர்களாகவும், நீதியின் வழியினின்று பின்வாங்கச் செய்கிறவர்களாயும் இருப்பவர்கள், தங்கள் சொந்த மனசாட்சியைத் தவறான வழியில் திருப்புபவர்களாய் இருப்பதினால், மற்றும் தங்களையே மிகவும் சீரழித்துக்கொள்வதினால், இவர்கள் கல்லறையிலிருந்து வெளியே வந்தபிற்பாடு, புதிய யுகத்தினுடைய நிபந்தனைகளுக்கு இசைவாக வருவதென்பது, இவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், வெளிச்சத்திற்கும் அறிவிற்கும் எதிராக பாவம் செய்பவர்கள், நித்திய ஜீவனுக்கான தங்களுடைய வாய்ப்புக்களை அபாயத்துக்குள்ளாக்குகின்றனர்.

“**மன்னிக்கும் ஆவி அவசியம்**”

லூக்கா**17:3** மற்றும் **4** வசனங்களானது, மத்தேயு **18:15–22** வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்படடுள்ள பிரசங்கத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றது. இப்பிரசங்கத்தின் பாடமானது உலக ஜனங்களுக்காக இல்லாமல், இயேசுவின் பின்னடியார்களுக்குக் கொடுக்கப்பட்டதாய் இருக்கின்றது. இது பின்னடியார்கள், அதாவது விசுவாச வீட்டாரிலுள்ள சகோதரர்களிடத்திலான அவர்களது கடமையைப் பற்றி பிரதானமாய்த் தெரிவிக்கின்றது.ஆனால் இரண்டாவதாக, இது பரந்த கண்ணோட்டம் ஒன்றையும் பெற்றிருக்கிறது. சில சமயங்களில் இந்த பரந்த கண்ணோட்டம் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் மத்தேயு **18**ம் அதிகாரத்தில் கூறப்பட்ட உத்தரவின்படி, சகோதரருக்கான ஆலோசனை கொடுக்கப்பட்டு, அதன் முடிவாக, தேவைப்படுமானால், சபை முன்பாக காரியம் வரும்போது, எந்த தனிப்பட்ட நபரை நோக்கமாய் கொண்டு அல்ல, மாறாக சபைக்கே கொடுக்கப்படுவதை நிரூபிக்கிறது.

இரக்கம், அதாவது, அளவற்ற இரக்கமே படிப்பினையாகும். அனைவருக்கும் இரக்கம், அதாவது தெய்வீக இரக்கம் தேவைப்படுகின்றது. காரணம், அனைவரும் பூரணமின்மையில் காணப்படுகின்றனர் என்பதே சம்பாஷணைக்கான அடிப்படையாக இருக்கின்றது. மேலும் இந்தக் கிருபையை நாம் அபிவிருத்தி செய்வதற்கு நமக்கு உதவத் தக்கதாக, நாம் எந்தளவுக்கு இந்த தேவனுக்கொப்பான பண்பை செயல்படுத்த முயற்சிக்கின்றோமோ, அதன் அடிப்படையிலேயே நமக்கு அவருடைய தயவையும், அவருடைய ஆசீர்வாதங்களையும் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். அவர் நன்றியறியாதவர்களிடத்திலும் கருணை காட்டுவதுபோல், நீங்களும் அவ்வாறே, உங்கள் பிதாவைப்போலவே இரக்கமுள்ளோராய் இருங்கள் – லூக் **6:35,36.**

பரிசுத்தவானாகிய பவுலினால், “பிசாசுகளின் உபதேசங்கள்” என்று அழைக்கப்படும் தவறான உபதேசங்களினால், நம்முடைய முன்னோர்களும், நாமும் இந்தளவு வஞ்சிக்கப்பட்டிருந்தது விநோதமாகவே தோன்றுகின்றது(**1**தீமோ**4:1**). பரம பிதாவானவர் மன்னிப்பை ஒருபோதும் வழங்காதவர் என்றும், அவர் தம்முடைய மனித சிருஷ்டிகள் பாவம்செய்தபடியால், அவர்களது பாவங்களை

மன்னிப்பதற்குப்பதிலாக, அவர்களை முழுமையாக வெறுக்கிறார் என்றும் ஒருகாலத்தில் நாம் எண்ணியிருந்தோம். பாவத்திற்கான தண்டனை அல்லது சம்பளம் சித்திரவதை என்றும், அதுவும் நித்திய காலத்துக்குமான சித்திரவதையாக இருக்கும் என்றும் நாம் வலியுறுத்திக் கூறிவந்தோம். சகல கிருபைகளுக்கும் தேவனாய் இருப்பவரின், அதாவது இரக்கங்களின் பிதாவாக இருப்பவரின் உண்மையான குணலட்சணத்தை நாம் எவ்வளவு குறைவாகப் புரிந்திருந்தோம்!

இன்னுமாக நம்மில் சிலர் நம்முடைய தப்பறைகளை நியாயப்படுத்தும் முயற்சியில், தேவன் அன்பானவராகவும், இரக்கமானவராகவும், நல்லவராகவும் இருந்தாலும், அவருடைய பின்னணியில் அவருடைய சிருஷ்டிகளைச் சித்திரவதைப்படுத்தவேண்டும் என்று கோரும் கடினமான பிரமாணம் ஒன்று காணப்படுவதாயும், அவராலேயே தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத பிரமாணம் ஒன்றைக் கொண்டிருப்பதாகவும், மனுக்குலத்திற்கு இப்பிரமாணம் கொடுத்திட்ட தீர்ப்பை அவர் நிறைவேற்றத் தக்கதாக, அப்பிரமாணத்திற்கு தேவன் கட்டுப்பட்டிருப்பதாகவும் நாமே அனுமானித்துக்கொண்டோம்.

இன்னும் சிலர், முழு மனுக்குலமானது, பிறப்பு மற்றும் இறப்பிற்கு இடைப்பட்ட காலத்திற்குள், பாவத்திலிருந்து நீதிக்கு திரும்புவதற்கும், பரிசுத்தவான்கள் ஆவதற்குமான முழு வாய்ப்பினைப் பெற்றுக்கொள்கின்றது என்ற கருத்தை, நாம் சிந்திக்கும்படியாக, நம்மைத் தவறான வழியில் நடத்திவிட்டனர். இவைகளெல்லாம் எவ்வளவு கேலிக்கு இடமாக இருக்கின்றது எனச் சமீப காலத்திலேயே வேதமாணவர்களாகிய நாம் அறிந்து விழிப்படைந்திருக்கிறோம். 4000 ஆண்டுகளாக ஒரு சிறு தேசமாகிய யூதர்கள் மாத்திரமே தேவனைப்பற்றிய அறிவை உடையவர்களாகக் காணப்பட்டார்கள் அல்லது இவர்களுக்கே நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டன அல்லது இவர்களுக்கே பாவம் மற்றும் அதன் தண்டனை பற்றின எந்த அறிவுரையும் கொடுக்கப்பட்டுள்ளது என்று இப்போதுதான் நாம் அறியவருகின்றோம். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட யூதர்கள்கூட, சாத்தானால் குருடாக்கப்பட்டுள்ளனர் என இயேசுவும், அப்போஸ்தலர்களும் தெரிவித்தனர். இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில் பேசும்போது, "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்" என்று கூறுகின்றார்(மத்தேயு 13:16). பெரும்பான்மையான யூதர்கள் பார்க்காதவர்களாகவும், கேட்காதவர்களாகவுமே காணப்பட்டனர். இதே நிலைமை கிறிஸ்தவ மண்டல ஜனத்தொகையில், பத்தில் ஒன்பது பங்கின் நிலைமையின் விஷயத்திலும் உண்மையாய்க் காணப்படுகின்றது. புறஜாதியாரைப் பற்றி நாம் சொல்லவே அவசியமில்லை.

எந்த ஒரு வேதவாக்கியங்களின் ஆதாரம் இல்லாமலும், வேத வாக்கியங்களுக்கு எதிராகவும், நம்மில் அநேகர், தற்போதைய வாழ்க்கையில் கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் அனைவரும், இன்னுமாக அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பரிசுத்த பின்னடியார்கள் ஆகாத அனைவரும், பிசாசுகளின் கரங்களில் நித்திய காலமாய்ச் சித்திரவதைப்படுவார்கள் என்ற கொடூரமான கூற்றை ஆதரித்தவர்களாகக் காணப்பட்டோம். இப்பொழுது கேட்பதற்குச் செவிகளை உடையவர்களாகவும், காண்கிறதற்குக் கண்களை உடையவர்களாகவும் இருந்து, கிறிஸ்து மூலமாய் தேவனுடன் உடன்படிக்கையின் உறவிற்குள் பிரவேசிப்பவர்களாகிய ஒரு சிறு வகுப்பாரே, இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கின்றவர்களாய் இருப்பார்கள் என்று வேதாகமம் போதிப்பதை, இப்பொழுது நாம் காண்கின்றோம். இவர்களுக்கு மாத்திரமே நித்திய ஜீவனை அடைவதற்கான வாய்ப்புகளனைத்தும், தற்கால ஜீவியத்திலேயே முடிவதாயுள்ளது. மீதமுள்ள மனுக்குலத்திற்கு நியாயத்தீர்ப்பின் காலங்களில், உயிர்த்தெழுதல் மூலமாகவே எதிர்கால ஜீவியத்தை தேவன் அருள தீர்மானித்திருக்கிறார்.

உயிர்த்தெழுதல் என்பது, சபை வகுப்பாருக்கு மாத்திரமே உரியதல்ல. சபைக்குரியது – முதலாவதான அல்லது பிரதானமான உயிர்த்தெழுதலாக இருக்கின்றது. ஆனால் உயிர்த்தெழுதல் என்பது,"நீதிமான்களுக்கும், அநீதிமான்களுக்குமுரிய" ஒன்றாகும்(அப்போஸ்தலர் 24:15). சபை வகுப்பார் மகிமைக்கும் கனத்திற்கும், அழியாமைக்குமென எழுந்து வருவார்கள். அநீதிமான்கள் நியாயத்தீர்ப்பு அடைகிறதற்கும், ஒழுங்குபடுத்தப்படுவதற்கும், நற்பலன்களை அடைகிறதற்கும், தண்டனை அடைகிறதற்கும், கல்லறைகளிலிருந்து எழுந்து வருவார்கள். மனுக்குலத்தார் இந்த நியாயத்தீர்ப்புகளையும், நித்திய ஜீவனை அடைவதற்கான வாய்ப்புகளையும் அடைவதற்கே, மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். இன்னுமாக ஜனங்களுக்கு உதவுவதற்காகவும், அவர்களுக்கு வெகுமதியளிக்கவும், நீதியாய்த் தண்டிப்பதற்கும், அவர் முறையான நியாயாதிபதிகளை நியமிக்கத்தக்கதாகவே, இப்பொழுது அவர் மாம்சத்திலுள்ள சபையை அழைக்கின்றார். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா ?(1கொரிந்தியர் 6:2).

**விசுவாசத்தின் வல்லமையும் – குருட்டுத்தனத்தின் வல்லமையும்**

கண்மூடித்தனமாக நம்பப்படுகின்ற அநேகமான விஷயங்கள், இன்று விசுவாசம் என எண்ணப்பட்டு வருகின்றது. ஒருவர் நம்மிடம் வந்து, சந்திரனானது பாலாடையினால் உண்டாக்கப்பட்டுள்ளது என்று உறுதியாய்க் கூறுவாரானால், அவர் கூறுவதை நம்புவது என்பது கண்மூடித்தனமான நம்பிக்கையே ஒழிய, விசுவாசமல்ல. ''இப்படிப்பட்டவைகளை சொல்லுகிறவன் யார் ? என்றும், இக்காரியத்தைப் பற்றி நாம் அறிந்துள்ளவைகளைக் காட்டிலும், இவைகளைச் சொன்னவன் என்னதான் அறிந்திருக்கிறான் ?'' என்றும் நாம் விசாரிக்கவேண்டும். வேதாகமத்தில் பரிந்துரைக்கப்பட்ட விசுவாசம் என்பது, தேவன் வாக்களித்துள்ளவைகளோடு தொடர்புபடுத்துவதாய் இருக்கின்றது. அவருடைய நல்ல வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றி முடிக்க அவரால் கூடும் என்பதில் சந்தேகிக்காத, கேள்வி கேட்காத முழு விசுவாசத்தையுடையோராயிருக்க நாம் உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

நம்முடைய முன்னோர்கள் மனிதர்கள்மீது, மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். விசுவாசம் என்று அவர்களுக்கு போதிக்கப்பட்டதெல்லாம், வெறும் கண்மூடித்தனமான நம்பிக்கையாகவே இருந்தது. அவர்கள் இருண்ட காலத்தின் விசுவாசப் பிரமாணங்களை அப்படியே உள்வாங்கிக் கொண்டனர். மேலும் எந்தளவுக்கு ஒரு கூற்று அர்த்தமற்றுக் காணப்பட்டதோ, அதில்தான் தங்களுக்கு அதிக விசுவாசம் அடைந்துள்ளதாக எண்ணிக்கொண்டார்கள். மாறாக, ''நிரூபணம் எங்கே ? இப்படிப்பட்ட காரியங்களை தேவன் எங்கே குறிப்பிட்டிருக்கிறார் ?'' என்று அவர்கள் வினவியிருந்திருக்க வேண்டும். விசுவாசப் பிரமாணங்களுக்கு ஆதரவு கொடுத்தவர்கள், தெளிந்த விசுவாசத்திற்கு எதிராக சந்தேகப்பட்டு கூக்குரலிட்டு, தெளிந்த விசுவாசமானது மதங்களுக்கு எதிரான கொள்கை என்று கூறி, அநேக சந்தர்ப்பங்களில் உண்மையுள்ள விசுவாசிகளை கழுமரத்தில் கட்டி எரித்துப்போட்டனர். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் நமக்கு உறுதியளித்துள்ளவைகளை மாத்திரமே, விசுவாசத்தினால் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே படிப்பினையாக உள்ளது; அதாவது, நாம் தூய்மையான தேவ வார்த்தைகளை, அதாவது தவறான மொழிபெயர்ப்புகள் நீங்கப்பெற்றதும், இடைச் செருகல் நீங்கப் பெற்றதுமான தூய்மையான தேவ வார்த்தைகளை நாம் பெற்றிருப்பதைக் குறித்து கவனமாய் இருக்கவேண்டுமென்பதே படிப்பினையாக இருக்கின்றது.

இயேசுவின் சீஷர்கள் அவருடைய போதனைகளின் மகத்துவங்களையும், நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளாலும் பதிவு செய்யப்பட்டுள்ளதும், மேசியாவின் இராஜ்யம் தொடர்புடையதாய் இயேசுவினால் கூறப்பட்ட ஆச்சரியமான காரியங்கள் நிறைவேறும் விஷயத்தில் அடையப்படவிருக்கும் சிரமங்களையும் மனதில் பதிய வைத்துக்கொண்டார்கள். ஆகையால் தங்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்படிக்கு சீஷர்கள் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு இயேசு கொடுத்த பதிலானது, நம்முடைய நாட்களில் பெரிதும் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுகின்றது. ''அதற்கு கர்த்தர்: கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்''(லூக்கா 17:6). மற்ற இரண்டு தருணங்களிலும், இயேசு மலைகளைக் குறித்து இதற்கொப்பாகவே குறிப்பிட்டுள்ளார்; ''...நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ எனறு சொன்னாலும் அப்படியாகும்'' என்றார்.

**என்ன அர்த்தத்தில் கூறியுள்ளார் ?**

மலைகள் சமுத்திரத்தினிடத்திற்கு இடம்பெயர்ந்து போகும்படி கட்டளையிட்டு, யூதர்கள் பிரயாசம் எடுப்பதற்காக, நிச்சயமாக ஆண்டவர் இவ்வார்த்தைகளைப் பேசவில்லை. மாறாக, அவர்களுக்கு தேவனுடைய வல்லமையின்மீது சரியான விசுவாசம் இருந்து, மலைகளைக் கடலுக்கு இடம்பெயர்க்கும்படிக்கு தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டாரானால், அவர்கள் விசுவாசத்துடன் மலைக்குக் கட்டளையிடும்போது, மலை கடலுக்கு இடம்பெயர்ந்து செல்லும் என்பதை யூதர்கள் உணர்ந்துகொள்ளவே இயேசு விரும்பினார். ஆனால் மலைகளுக்கோ அல்லது மரம் தொடர்புடைய விஷயத்திலோ தேவன் இப்படியாக எந்தக் கட்டளையையும் கொடுக்கவில்லை. ஆகவே இப்படிப்பட்ட விஷயங்களில் விசுவாசம் இயக்கப்படும்படி எந்த அடிப்படையையும் பெற்றிருப்பதில்லை.

ஒரு சகோதரரிடம் ஒருகேள்வி கேட்டபோது, அவர் சரியான ஒரு பதிலைக் கொடுத்தார். அதாவது, ''ஒருவேளை தேவன் உங்களிடம் மதில் சுவரிலிருந்து குதித்துவிட சொல்வாரானால், நீங்கள் என்ன செய்வீர்கள் ? என்று கேட்டபோது. ''நான் குதித்துவிடுவேன்'' என்று பதில் சொன்னார். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், நாம்

தேவனுடைய செய்தியைக் கேட்டு சரியாய்ப் புரிந்துள்ளோமா என்று உறுதிப்படுத்துகிறவர்களாய் மாத்திரம் இராமல், தேவனுடைய வார்த்தைகளில் முற்றும் முழுமையாய் நம்பிக்கை கொள்கிறவர்களாய் இருக்கவேண்டும். பின்னர் மலையை இடம்பெயர்க்கும் அளவிலான விசுவாசத்துடன், அவருடைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு முன்னேறிச் செல்கிறவர்களாய் இருக்கவேண்டும்.ஆனால் தேவன் முட்டாள்தனமான காரியங்களை அல்லது அவசியமில்லாத மாற்றங்களைச் செய்யும்படிக்கு கட்டளையிடுவதில்லை. மரங்களை வேரோடே பிடுங்குவதற்கான அல்லது மலைகளை இடம்பெயர்க்கப் பண்ணுவதற்கான இம்மாதிரியான கட்டளைகளை தேவன் கொடுப்பதில்லை. இப்படியாக செய்வதை மனிதன் தன் புத்தியின்படி முடிவு எடுக்கும்படி தேவன் விட்டுவிடுகிறாரே தவிர, அவர் இம்மாதிரியான கட்டளைகளையெல்லாம் கொடுப்பதில்லை. இப்படியாக மரத்தின் அல்லது மலையின் விஷயத்தில், விசுவாசத்தினால் மலையை இடம்பெயர்த்துவிட்டதாக ஒரு மனுஷன் நம்மிடம் கூறுவானானால், நாம் அவனை நம்புவது, கண்மூடித்தனமான நம்பிக்கையாகும். இப்படியான விதங்களில் தேவன் கிரியை செய்வதில்லை.

**நம் எஜமானுக்குப் பிரயோஜனமற்றவர்கள்**

கிறிஸ்துவின் பின்னடியார்கள் மத்தியில் சிலர், இயல்பாகவே முன்னேறுகிற தன்மையுடையவர்களாகவும், சிலசமயம் மிகவும் இறுமாப்புக் கொண்டவர்களாகவும், சண்டையிடுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். அவருடைய சீஷர்களானவுடன் இந்தப் பண்புகள் உடனடியாக மாறிவிடுவதில்லை. பழையவைகள் படிப்படியாகவே கடந்துபோகின்றன. மற்றும் பழையவைகள் கடந்துபோன இடங்களில் புதியவைகள் வருகின்றன. அவருடைய சீஷர்கள் அனைவரும், அதிலும் விசேஷமாக இங்கு குறிப்பிடப்படும் வகுப்பாரும் நினைவில்கொள்ளவேண்டிய ஊக்கமிக்க படிப்பினை இப்பாடத்தில் கற்பிக்கப்படுகிறது. தேவனுடைய கிருபையின் கிரியைக்கு கீழ்ப்பட்டிருக்கிற இவர்கள், அது தங்களிடத்தில் காண்பிக்கப்பட்ட தேவனுடைய தயை என்றும், அவருடைய கட்டளைகளுக்கான தங்களுடைய கீழ்ப்படிதலானது, பிரதானமாய்த் தங்களைச் சீர்ப்படுத்துவதற்கும், வளர்ச்சியடையச் செய்வதற்கும், மற்றும் ஆசீர்வாதமான எதிர்கால ஜீவியத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அவசியம் என்றும் இவர்கள் நினைவில் கொள்ளவேண்டும். இவர்கள், தாங்கள் கர்த்தருக்குச் செய்யும் ஊழியமும் ஒரு சிலாக்கியம் என்றும், தங்களுடைய ஊழியங்களினால் தேவன் ஆதாயமடைவதில்லை என்றும் நினைவில் கொள்ளவேண்டும்.

நம்மை அல்லாமல் தேவனால் மிக எளிமையாகக் காரியங்களைச் செய்துவிடமுடியும். அதாவது, நம் மூலமாய்ச் செய்வதைக் காட்டிலும், அவரால் எளிமையாக காரியங்களைச் செய்துவிடமுடியும் என்றவிதத்தில், நாம் அனைவரும் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்களாய் இருக்கின்றோம். அவரால் தம்முடைய தேவதூதர்களையும் அல்லது ஜீவியத்தின் பல்வேறு ஏற்பாடுகளையும் அவரது செய்தியாளர்களாக பயன்படுத்த முடியும். நம்மில் எவரும் அவருடைய வேலைக்கும், அவருடைய மகிமைக்கும் அவசியமானவர்களாய்க் காணப்படுவதில்லை. மாறாக, கர்த்தருடைய திராட்சத் தோட்டத்திற்குள் பிரவேசிப்பதற்கும், வேலைபுரிவதற்குமான வாய்ப்பு என்பது, பிரதானமாக நம்முடைய சொந்த அனுகூலத்திற்கென்றே இருக்கிறது. இந்த ஊழியமானது, ஒருவிதமான சந்தோஷங்களை நமக்குக் கொண்டுவருகின்றது. இந்தச் சந்தோஷத்தை வேறெந்த விதத்திலும் நாம் பெற்றுக்கொள்ள முடியாது. திரைக்கு அப்பால் உன்னதமான ஊழியங்களை செய்வதற்கான தகுதிகளுக்கும், வளர்ச்சிக்கும் அவசியமான குறிப்பிட்ட அனுபவங்களை, இந்த ஊழியங்களானது நமக்குக் கொண்டுவருகிறது.

"கிருபையினாலே (தெய்வீக தயவு) விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்(எபே2:8). விசுவாசம் என்பது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நம் சொந்த வளர்ச்சிக்குரிய காரியமாயுள்ளது.எனினும் விசுவாசம் நம்மால் உண்டானதல்ல, அது தேவனுடைய ஈவாக இருக்கின்றது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.. ஆகையால் நம்முடைய விசுவாசத்தில் நாம் மேன்மை பாராட்டிக்கொள்வதற்கு வாய்ப்பில்லை. கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டிராத எதை நாம் பெற்றிருக்கிறோம்? தேவனுடைய ஏற்பாடுகள் நமக்குக் கொடுக்கப்பட்டதால், அடிப்படை விசுவாசத்துக்குத் தேவையான ஆதாரமாக, குறிப்பிட்ட அறிவை நாம் அடைந்தோம், மேலும் தயை நிறைந்த பெற்றோரின் மரபு மூலமாக நாம் ஆயத்தப்படுத்தப் பட்டிருக்கவும் சாத்தியமுண்டு.

----------

**சகோதரர்கள் கவனத்திற்கு:– லவோதிக்கேயன் டைம்ஸ், பத்திரிக்கைகளில் கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்து படிக்கவும்;**

**<u>திருத்தம் 1. ஏப்ரல் – ஜுன் 2020 – 3ம் பக்கம் முதல் பத்தி</u> :–**

ஆம், அவர்களில் அநேகர், ராஜ்யத்தில் தங்கள் எஜமானோடுகூடஉடன்சுதந்திரராவதிலிருந்தும், மகிமை–யடைவதிலிருந்தும் தங்களை துண்டித்துக் கொள்கிறார்கள் என நாம் அச்சப்படுகிறோம். சவுலின் அனுபவங்களின் மூலம் நமக்குக் கொடுக்கப்பட்ட இந்தப் பாடத்தைக் கற்க, அவரது வார்த்தைக்கு நாம் மிக விழிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று நம் பரலோகத் தகப்பன் விரும்புகிறார். அவ்வார்த்தையை நாம் மேம்படுத்தமுடியும் என்றோ(to make better), அல்லது எந்தவொரு சூழ்நிலையோ அல்லது நிலைமையோ அவருக்குக் கீழ்ப்படியாத நிலையை உண்டாக்குமானால் அதற்கு மன்னிப்பு உண்டு என்றோ ஒரு கனம்கூட யோசிக்கக்கூடாது என்ற இப் பாடத்தை நாம் கற்கவேண்டும்.

**<u>திருத்தம் 2. ஜுலை–செப்டம்பர் 2020</u>**, முதல் கட்டுரையின் ஆங்கில தலைப்பு : THE UNJUST STEWARD